
# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

**KARKATHAR OPPURAVU**

| மலர்–17, இதழ் – 7<br>Volume - 17, Issue - 7 | ஆனி திங்கள்<br>June 2026 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|

THE KNEE INSTITUTE
RESTORING MOVEMENT
By
Parvathy Hospitals



# சிகிச்சைக்குப் பிறகும் முழங்கால் வலி கவலையா?

"என் முழங்கால் இப்போது முன்பு போல் நன்றாக உள்ளது."

கவலை வேண்டாம்...
வலி இனி இல்லை!

**KINEMATICALLY ALIGNED KNEE REPLACEMENT**
மூலம் சிறந்த தீர்வு.

- அதே நாளில் டிஸ்சார்ஜ்
- அறுவை சிகிச்சைக்குப் பின் (பிசியோதெரபி) தேவையில்லை

## எங்கள் சிகிச்சையின் சிறப்புகள்


- சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவர்கள்
- அடுத்த நாளிலிருந்து குளிக்கலாம் – இயல்பான வாழ்க்கை தொடரலாம்
- குறைந்த வலி – சிறந்த சிகிச்சை முறை
- ஸ்டேபிள்ஸ் / தையல் அகற்றம் இல்லாத சிகிச்சை

**எங்களிடம் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 95% பேர் 10 முதல் 30 மணி நேரத்திற்குள் நலம் பெற்று வீடு திரும்புகின்றனர்.**

மேலும் தகவல்களுக்கு: பார்வதி ஆர்த்தோ மருத்துவமனை பிரைவேட் லிமிடெட்
தொலைபேசி: 044 2238 2248 இணையதளம்: www.parvathyhospital.com/knee-institute
241, GST சாலை (MIT மேம்பாலம் பாலம் அருகில்), குரோம்பேட்டை, சென்னை – 600044


LAUNCHING
CAMBRIDGE
LIVE A LONDON LIFE
BY DAC
JUNE 5th - 7th, 2026
DAC
DREAM ASCEND CONQUER
A SIGNATURE OF
British Sophistication On OMR
2&3 BHK
LONDON THEMED APARTMENTS
₹85L ONWARDS
NEAR SHOLINGANALLUR
0% EMI
TILL YOU MOVE IN
93003 93003
TNRERA/29/BLG/0041/2026
DATED 10.02.2026
www.rera.tn.gov.in
110+ PROJECTS
4.5M+ SQFT CONSTRUCTION
3000+ HAPPY FAMILIES
Member CREDAI

# திருமண வாழ்த்து



திருச்சி, உறையூர்

திரு.R.சிவராமகிருஷ்ணன் - திருமதி. S.சித்ரா
திருச்சி சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்

இவர்களின் அன்பு மகள்

**R.S.அருணா பிரியங்கா,** B.Tech., MBA.,

திருப்பூர்,

திரு.G.பாஸ்கர் - திருமதி.சாந்தி

இவர்களின் அன்பு மகன்

**B.நவீன் பாலாஜி,** B.E Mech.,

**திருமணவிழா 13.05.2026** புதன்கிழமை காலை 6.00 மணிமுதல் 7.00 மணியளவில்

**திருச்சி, மத்திய பேருந்து நிலையம் ( அரிஸ்டோ ரவுண்டானா அருகில்)**

**ரயில் மஹாலில்** மிகச்சிறப்பாக நடைபெற்றது.

**திருமண விழாவிற்கு வருகைதந்து மணமக்களை வாழ்த்திய அனைவருக்கும் மணமகன் மற்றும் மணமகள் வீட்டார் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.**

தங்கள் அன்புள்ள

திரு.**G.பாஸ்கர்**
திருமதி.**B.சாந்தி**
**B.லோகேஷ்,** B.E.,
திருப்பூர்,



திரு.**R.சிவராமகிருஷ்ணன்,** B.E., M.I.E.,
Sr. Engineer (Retd) BHEL
திருமதி.**S.சித்ரா,** M.A., திருச்சி
திரு.**R.S.பாலாஜி,** B.E.,CSWIP (TWI-UK)
திருமதி.**அனிதா பாலாஜி,** B.E., Sharjah UAE



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
**PURE VEG**

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

# மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் க. செல்வம்** |
| படிப்பு | B.E. (Mechanical Engineering) |
| வேலை | Senior Dimensional Engineer, Mahindra, Chengalpet<br>Rs. 13 Lakhs / PA |
| பிறந்த தேதி | 12.11.1994 |
| உயரம் | 170 cm |
| நட்சத்திரம் | சதயம் 4ம் பாதம் |
| கோத்திரம் | தென்னவராய |
| பூர்வீகம் | சாத்தநத்தம் |
| தகப்பனார் | **S. கணபதி பிள்ளை** |
| தாயார் | **க. சிவகாமசுந்தரி** |
| முகவரி | #3/38, தெற்கு வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம்,<br>திட்டக்குடி,<br>கடலூர் - 606 105.<br>Cell : 99623 74624, 90431 65040 |
| விருப்பம் | பணியில் உள்ள வரன் |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் சந்தோஷ்குமார் .அ** |
| படிப்பு | M.Com., |
| வேலை | Grocery Shop<br>Rs. 30,000/PM |
| பிறந்த தேதி | 1.12.1998 |
| நட்சத்திரம் | அசுபதி |
| கோத்திரம் | காலிங்கராயர் |
| பூர்வீகம் | மதுராந்தகநல்லூர், சிதம்பரம் |
| தகப்பனார் | **S. அம்பலவாணன்** (லேட்) |
| தாயார் | **A. சிவகாமசுந்தரி** |
| முகவரி | மதுராந்தகநல்லூர், சிதம்பரம்<br>Cell : 90038 32934 (Whatsapp)<br>88255 62021 |
| விருப்பம் | படித்த நல்ல குணமுள்ள பெண். |

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் Dr. R. ராம் பிரசாத்** |
| படிப்பு | M.B.B.S., M.S. (Gen. Surgery),<br>DrNB (SS) Surgical Gastroenterology |
| பிறந்த தேதி | 19.10.1998 |
| உயரம் | 180 cm |
| நட்சத்திரம் | அஸ்தம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | இளந்தோப்பு |
| தகப்பனார் | **ஏ. இராஜசேகரன்**<br>பேராசிரியர் (ஓய்வு)<br>அரசு பதிவு பெற்ற மதிப்பீட்டாளர் |
| தாயார் | **R. உஷா,** M.Sc., M.Phil., B.Ed.,<br>(இல்லத்தரசி) கீழையூர் |
| முகவரி | பிளாட் எண். 01, ADJJ Avenue,<br>பங்களா கிளப் ரோடு, காடம்பாடி,<br>நாகப்பட்டினம் - 611 011.<br>Cell : 98424 48370, 98424 32803 |
| விருப்பம் | M.S., அல்லது M.D., முடித்த அல்லது படிக்கின்ற வரன் |

# மணமகள் தேவை

பெயர் செல்வன் **S. ஜோதி**
படிப்பு B.E. (EEE)
வேலை Infosys, Chennai
Rs. 9 Lakhs/PA



பிறந்த தேதி **04.03.1994**
உயரம் 177 cm
நட்சத்திரம் கேட்டை
கோத்திரம் கொங்கராய
பூர்வீகம் T.V புதூர் (விருதாசலம்)
தகப்பனார் **C. சிவகுருநாதன்**
தாயார் **S. சந்திரா**
முகவரி 2/76, லட்சுமி விநாயகர் கோயில் தெரு,
காரபாக்கம்,
சென்னை – **600 097.**
Cell : 99629 04490
விருப்பம் சென்னையில் பணிபுரியும் பெண்.
அல்லது பணிபுரிய விருப்பமுள்ள பெண்.

---

பெயர் செல்வன் **PRASANTH K**
படிப்பு B.E. (EEE)
வேலை Senior Software Engineer,
Relevantz Technology Solutions
Chennai
Rs. 17 Lakhs / PA



பிறந்த தேதி 02.03.1996
உயரம் 173 cm
நட்சத்திரம் Ayilyam
கோத்திரம் Kothanuda
பூர்வீகம் Kothattai, Pennadam
தகப்பனார் **Karuppusamy A,** B.E.,
Chief General Manager (Retd.)
NLCIL
தாயார் **Poompozhili B,** B.A., BLIS, D.Agri.,
Senior Agricultural Officer,
TNAU, Vridhachalam
முகவரி 320/1, Saamandhi Poo Street,
Periyar Nagar South, Vridhachalam,
Pin Code : 606 001.
Cell : 94868 36268, 94422 69365

---

பெயர் செல்வன் **S. RAVEEN KUMAR**
படிப்பு M. Tech., VLSI.,
வேலை Senior Engineer
MNC @ Chennai
Rs. 48 lakhs per Annum



பிறந்த தேதி 21.11.1993
உயரம் 175 cm
நட்சத்திரம் Sathayam
கோத்திரம் Kanagarayar
பூர்வீகம் Madurai
தகப்பனார் **A. Sankar**
Retd Director of School Education
தாயார் **P. Vasanthi**
Retd Head Mistress Govt HSS School
முகவரி Plot No. 28 & 29, VGN Highness,
Srinivasapuram, Iyyappanthangal,
Chennai-600056.
Cell : 7845914635/ 9488094635
விருப்பம் Employed or Employable Good looking girl belongs to respectable family

---

பெயர் செல்வன் **ந. தேவா (எ) சந்திரமௌலீஸ்வரன்**
படிப்பு B.E. (EEE), M.E. (Industrial)
வேலை E.H.S. Safety Eng., Officer,
Sivagangai
Rs. 6.5 Lakhs/PA



பிறந்த தேதி 11.11.2001
உயரம் 173 cm
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் பருவுட
பூர்வீகம் அங்கராயநல்லூர்
தகப்பனார் **V. நடராஜன் பிள்ளை,**
விவசாயம் & ஒப்பந்ததாரர்
தாயார் **ரோகிணி (எ) விஜயலெட்சுமி**
இல்லத்தரசி (பெண்ணாகடம்)
முகவரி III -வது குறுக்குத் தெரு (வலது),
கணபதி நகர், ஜெயங்கொண்டம்,
அரியலூர் Dt. - 621802.
Cell : 97154 29234 (W), 99767 80345
விருப்பம் ஏதேனும் பட்டப்படிப்பு, பணியில் உள்ள / இல்லாத வரன்

# மணமகன் / மணமகள் தேவை

பெயர் **செல்வி மகாலெக்ஷ்சுமி S**
படிப்பு B.E. (CSE)
வேலை Packaged App Development,
Senior Analyst (Salesforce Developer)
Accenture Solutions Private Limited, Chennai
Rs. 15.3 Lakhs/PA



பிறந்த தேதி 05.12.2000
உயரம் 165 cm
நட்சத்திரம் உத்திரட்டாதி 1ம் பாதம்
கோத்திரம் கலப்பாலுட
பூர்வீகம் மறையூர், மயிலாடுதுறை
தகப்பனார் **சரவணன் R,** Business
தாயார் **ரத்னா S,** Home Maker
முகவரி 18/3, கீழகொண்டயம் பேட்டை,
திருவானைக்கோவில்,
திருச்சி - 620 005.
Cell : 94430 75596, 99941 12397
விருப்பம் 1995, அதற்கு மேல் பிறந்தவராக
இருக்க வேண்டும்.
சமமான கல்வித் தகுதி,
நல்ல வேலைவாய்ப்பு

---

பெயர் **செல்வி P. RITHIKA**
படிப்பு B.E. (ECE)
Associate software Engineer,
Tech Mahindra Ltd., Chennai
Rs. 4 Lakhs / PA



பிறந்த தேதி 26.09.2003
உயரம் 159 cm
நட்சத்திரம் Utthiram 4th Patham
கோத்திரம் Vilvaraya
பூர்வீகம் O. Keeranur, Cuddalore Dt.,
தகப்பனார் **P. Palanivel,** B.Sc., Dst.
Business, Virtuthai Hotel, Viruthachalam
தாயார் **P. Thenmozhi,** M.Sc.,B.Ed.,
Home Maker (Anganur, Ariyalur Dt.)
முகவரி Arunachalam Nagar Extension,
Viruthai illam,
Virudhachalam (P.O.) & (TK).,
Cuddalore Dt. - 606 001.
Cell : 98429 61465, 77081 20564 (W)

---

பெயர் **செல்வன் JEEVA S U**
படிப்பு B Tech (Aero Space Engineering)
IIT Madras
வேலை SAP Senior Package Implementation
Specialist, LTM (L&T), Bangalore
Rs. 22 LPA
பிறந்த தேதி 22-07-1999
உயரம் 172 cm
நட்சத்திரம் Visagam
கோத்திரம் Ponnamuda
பூர்வீகம் Thirunaraiyur, Cuddalore Dist
தகப்பனார் **Senguttuvan S**
Chief Manager,
NLC India Ltd. Neyveli
தாயார் **Uma V**
LIC of India, Neyveli
Maranthai, Nellai Dist.
முகவரி 288, Ashok Nagar – II
Vadakuthu (Neyveli)
Cuddalore Dist – 607308
Cell : 9443113650, 9442560903



**இதழின் உள்ளே....**




சங்க நிகழ்வுகள்....................................................11 – 18

சங்கப் பலகை..................................................................19

மணமகன் / மணமகள் தேவை........................21–24

சிறுவர் பகுதி ........................................................33–36

CREW கல்வி உதவி தொகை விண்ணப்பம்...37–40



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



உயிரினும் மேலான அன்புச் சொந்தங்களுக்கு கார்காத்தார் ஒப்புரவின் இனிய வணக்கங்களும்! வாழ்த்துக்களும்!

ஐந்து மாநிலத் தேர்தல்கள் முடிந்து, அம்மாநிலங்களில் ஆட்சி அமைக்கப்பட்டுவிட்டது. தமிழகத்தில் 1967ஆம் தேர்தலுக்குப் பிறகு, அதே பராபவ ஆண்டில் புதிய ஆட்சி மலர்ந்திருக்கிறது. நடிகர் விஜய் அவர்களின் தமிழக வெற்றிக் கழகம் தனிப்பெரும் கட்சியாக 108 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. ஆனால் ஆட்சி அமைக்க போதுமானதல்லாததால், மற்ற பிற கட்சிகளை இணைத்து பெரும்பான்மை பலத்தை நிரூபித்து, திரு. விஜய் அவர்கள் முதல்வராகி உள்ளார். மேற்குவங்கத்தில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு மம்தாபானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் தோல்வி அடைந்து, பாரதிய ஜனதா கட்சி முதன்முறையாக ஆட்சிக்கு வந்துள்ளது. முதல்வராக உயர்திரு சுவேந்து அதிகாரி மே 9ஆம் தேதி பதவியேற்றுள்ளார். கேரளாவில் இடதுசாரி ஜனநாயக முன்னணியை வென்று, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 102 இடங்களைக் கைப்பற்றி, வி.டி. சதீஷன் முதல்வராகி உள்ளார். அஸ்ஸாம் மாநிலத்தில் பாரதிய ஜனதா பெரும்பான்மை பெற்று, ஆட்சியைத் தக்க வைத்துள்ளது. முதல்வராக மே மாதம் 12ஆம் தேதி டாக்டர் ஹிமந்த பிஸ்வா சர்மா தொடர்ந்து இரண்டாவது முறையாக பதவியேற்றிருக்கிறார். பாண்டிச்சேரியில் NR காங்கிரஸ் வெற்றி அடைந்து, உயர்திரு என். ரங்கசாமி அவர்கள் 5வது முறையாக முதல்வரானார். அனைத்து முதல்வர்களும், அவர்களுக்கு வழங்கப்பட்ட மக்கள் பணியினைச் செவ்வனே செய்ய வாழ்த்துவோம்! வாழ்த்துகிறோம்!

Neet தேர்வின் வினாத்தாள் கசிந்திருப்பதால், அத்தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது. மாணாக்கர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் அனைவருக்குமே மிகுந்த மனக்கஷ்டத்தையும், சிரமத்தையும், அரசுக்கு பண நஷ்டத்தையும் கொடுத்துள்ளது. 22 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதிய இத்தேர்வின் வினாத்தாளை பணத்திற்கு ஆசைப்பட்டு கசிய விட்டவர்களை என்னவென்று சொல்வது? மாணவர்களின்

எதிர்காலத்துடன் விளையாடுவது எத்தகைய கொடுஞ்செயல்! மறு தேர்வு ஜூன் மாதம் 21ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது. மாணவர்கள் சிறப்பாக எழுதி, தேர்ச்சி பெற இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவோம்.

10ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளது. 94.31% மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவியர் 96.47% சதவீதமும், மாணவர்கள் 92.15% தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழில் 34ம், ஆங்கிலத்தில் 92ம், கணிதத்தில் 3194ம், அறிவியலில் 10,476ம், சமூக அறிவியலில் 3336 மாணவர்களும் நூற்றுக்கு நூறு வாங்கியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நமது வாழ்த்துக்கள்! 10ஆம் வகுப்பு தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்கள், அவர்களின் வெற்றிக்கு பாடுபட்ட ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர், பள்ளி நிர்வாகிகள் என அனைவரையும் பாராட்டுவோம்!

இந்தியாவின் முப்படைத் தலைமை தளபதியாக தமிழகத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற லெப்டினென்ட் ஜெனரலான ராஜா சுப்ரமணி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியிலும் அவர் வெற்றி பெற வாழ்த்துவோம்!

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. 8248449204**க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

***அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,***
***எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.***
***என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.***

***- கார்காத்தார் ஒப்புரவு***

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர்:

செயற்குழு கூட்டம் 24.05.2026 அன்று நமது சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. கோ. தியாகராஜன் அவர்களது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அண்மையில் மறைந்த சங்க உறுப்பினர் திரு. ந. சரவணமுத்து (த/பெ. நடராஜன், மடிப்பாக்கம்) மற்றும் சங்க உறுப்பினர்களின் உறவினர்கள் மறைவிற்கும் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர் திரு. வே. கண்ணன் சென்ற மாத அறிக்கையினை வாசித்தார். பொருளாளர் திரு. வை. செல்வகுமார் தற்போதைய நிதிநிலை பற்றிய விவரங்களை தெரிவித்தார். முன்னதாக வருமானவரி தாக்கல் பற்றிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நமது குல கணக்கு தணிக்கையாளர் திரு. S. பரிமேலழகன் அவர்கள் கலந்துகொண்டு உறுப்பினர்களின் ஐயங்களுக்கு பதில் அளித்ததுடன் வருமானம், சேமிப்பு மற்றும் வருமான வரி தாக்கல் போன்ற பல்வேறு விஷயங்களை பற்றி சிறப்பாக விளக்கமளித்தார். பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்க துணை நின்ற கார்குல சொந்தங்களுக்கும் முனைப்புடன் செயல்பட்டு வரும் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் மகளிரணியினருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். சிறப்பான சிற்றுண்டி வழங்கிய செயற்குழு உறுப்பினர் திரு. R. தில்லை கோவிந்தன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. துணைத்தலைவர் திரு. கோ. சுவாமிநாதன் அவர்களது நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– வே. கண்ணன், செயலாளர்

### செந்துறை:

சங்க கூட்டம் 03.05.2026 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் சங்கத்தலைவர் திரு. T. வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் பொருளாளர் திரு. R. இராஜவேல் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

இரங்கல் செய்தி: நமது சங்க உறுப்பினர்கள் திரு. சி. செல்வகுமார் மற்றும் திரு. சி. சக்திவேல் இவர்களின் தாயார் திருமதி. சி. வாலாம்பாள் ஆச்சி அவர்கள் 19.04.2026 அன்று உடல்நலக் குறைவால் இயற்கை எய்தியதற்கு சங்கத்தின் சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

குரு பூஜை: வருகின்ற வைகாசி மாதம் 19ம் நாள் (02.06.2026) செவ்வாய்கிழமை திருஞான சம்பந்தர் குரு பூஜை விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவது பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மற்றும் சங்க வளர்ச்சி, மடாலய கட்டடப்பணிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இறுதியாக சங்கத் துணைத்தலைவர் திரு. சு. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– சா. ஜெயராமன், செயலாளர்

### சீர்காழி

26.4.26 அன்று சீர்காழி சங்கத்தின் 23–வது ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. காலை 8.00 மணிக்கு திரு. S. ஞானசேகரன் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் அவர்கள் சங்கச் கொடியை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து மகளிரணியினர் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கிவைத்தனர். மாணவ, மாணவியருக்கு அறிவு சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. மகளிருக்கு கோலப் போட்டிகள் நடத்தப்பட்டது. மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு சிறப்பு விருந்தினர்களாக

திரு. Dr. P. தர்மராஜன் M.B.B.S., M.D. மற்றும் திருமதி. ஷோபா தர்மராஜன் M.B.B.S., D.G.O. இருவரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். மேலும் உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேச்சாளராக திரு. க. சிவகுருநாதன் M.A.B,L. (திருச்சி நகைச்சுவை மன்றம்) அவர்கள் 'மகிழ்ச்சி வசப்படும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

விளையாட்டுப்போட்டிகளில்பங்கேற்றவர்களில் குலுக்கல் முறையில் சிறப்புப் பரிசாக (மிக்சி) ஒன்று திரு. கி. ஜெயச்சந்திரன்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டது. சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் 10 மற்றும் +2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற தலா முதல் மூன்று மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டது. ஆண்டுவிழாவைத் தொடர்ந்து நடந்த பொதுக்குழு கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1. திரு. சி. அகோரம்பிள்ளை தலைவராகவும், 2. திரு. சே. ரவிச்சந்திரன் செயலாளராகவும், 3. திரு. லெ. செந்தில்குமார் பிள்ளை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Er. திரு. T. செந்தில்குமார்பிள்ளை அவர்கள் நன்றி கூற இரவு விருந்துக்குப்பின் விழா இனிதே நிறைவு பெற்றது. ஆண்டுவிழா சிறக்க ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் சங்கம் மனதார நன்றி பாராட்டுகிறது.

– S. ரவிச்சந்திரன் பிள்ளை,
செயலாளர்

## இளந்தோப்பு

இம்மாத சங்க கூட்டம் இளந்தோப்பு (16.5.26) சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது.

தலைமை: S. செந்தூர்பாண்டி

முன்னிலை: S. சீனிவாசன்பிள்ளை

சித்திரா பௌர்ணமி ஸ்ரீ வாழமுடை அய்யனார்) காவடி மற்றும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றதற்காக உறுப்பினர் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

சித்ரா பௌர்ணமி விழாவின் வரவு செலவு கணக்குகளை சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு காண்பிக்கப்பட்டது. திரு. S. செல்வநாயகம் பிள்ளை (ஆசிரியர் ஒய்வு) நன்றியுரை கூற இம்மாத கூட்டம் இனிதே முடிவுற்றது.

V. ராமமூர்த்தி, தலைவர்

## மணிக்கிராமம்:

சங்க கூட்டம் 29.4.26 அன்று ஸ்ரீ திருமேனி அழகர்கோவில் வளாகத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்ற கூட்டம் – சங்க முன்னாள் தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும், திரு. T. கபிலன் செயலாளர் ஆண்டறிக்கை வாசிக்கவும், திரு. S. பரமநாதன் வரவு–செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. தலைவர் தனது உரையில் ஒவ்வொரு மாதமும் சங்க கூட்டத்திற்கு அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொண்டார். ஜூன் மாதத்தில் இன்ப சுற்றுலா செல்வது என முடிவு செய்யப்பட்டது. மணிக்கிராமம் மேலத்தெருவை சார்ந்த திரு. தமிழ்செல்வன் திரு. தமிழ்அரசு அவர்களின் தாயார் சிவலோக பதவி அடைந்ததற்கு இரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இறுதியாக சங்க பொருளாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், தலைவர்

## மயிலாடுதுறை:

10–05–2026 அன்று செயற்குழுக்கூட்டம், மகளிரணி திருமதி. கார்குழலி ஞானம் அவர்களின் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது. தலைவர் பொறுப்பு T. ரவிக்குமார் அவர்களின் வரவேற்புரைக்கு பின்னர் செயலர், பொருளாளர் தங்களது அறிக்கையினை பதிவு செய்தார்கள். மகளிரணி செயலர் திருமதி. அகிலா ரெத்தினக்குமார் அறிக்கையினை பதிவு செய்தார்கள். பின்னர் பேசிய தலைவர் (பொறுப்பு) சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு முதற்கண் நம் குல ஏழ்மை நிலையில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கிட நம் கார்குல உறவுகளிடம் இருந்து நிதி வசூல் செய்திட அனுமதி கோரப்பட்டும், இரண்டாவதாக பாரம்பரியம்மிக்க மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் மூலமாக நடத்தப்பெறும் ''மங்கல சந்திப்பு'' அனுமதியும், ஒரு குழு அமைத்திடவும் அனுமதி கோரப்பட்டது.

பின்னர் தனது மேலான கருத்துக்களை எடுத்துரைத்த மேனாள் தலைவரும் தேசிய நல்லாசிரியர் G. முருகையன் மூன்று தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என தனது கருத்தாக பதிவு செய்து மகளிரணியினருக்கு அன்னையர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். கட்டிட நிதியில் உள்ள பணத்தினை கல்வி ஊக்கத்தொகை

வழங்கிட கல்வி நிதிக் கணக்கில் மாற்றி கொள்ளலாம் என்றும், மேலும் இந்த இடைப்பட்ட காலத்தில் மகளிரணியினர் மிக சிறப்பாக நிகழ்வுகளை நடத்தி தொய்வு இன்றி செயல்படுத்தியமைக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்கள். மேலும் மங்கல சந்திப்பு குழு அமைத்து, பழைய பொறுப்பாளர்களும் விருப்பம் உள்ளவர்களும் இணைந்து செயல்பட வேண்டும் எனக் கூறினார்கள். அடுத்து பேசிய திரு. அக்ரி R. ராஜா அவர்கள் வங்கி பரிவர்த்தனை தொடர்பான கருத்தினை பதிவு செய்தார். பின்னர் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, இணைச்செயலர் முனைவர் G. பிரதிப் அவர்களின் நன்றியுரையுடன் கடந்த காலங்களில் உயிர் நீத்த நம் கார்குல சொந்தங்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு கூட்டம் நிறைவுற்றது.

– செயலாளர்

## மயிலாடுதுறை மகளிர் அணி:

மகளிர் அணியினரால் சிறுவர், சிறுமிகளுக்கான ‘‘கோடை கால சிறப்பு வகுப்புகள்’’ ஏப்ரல் மாதம், 24, 25–26ஆம் தேதிகளில் 3 நாட்கள், மயிலாடுதுறை கார்காத்த வேளாளர் சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. திருமுறை & திருப்புகழ் பாடல்கள், யோகா, Art & Craft, Puzzles என வகுப்புகள் நடத்தப்பட்டது. வருகைபுரிந்த குழந்தைகளில் 5 முதல் 10 வயது, 11 முதல் 15 வயது வரை என 2 பிரிவுகளாக நடத்தப்பட்டது. கடைசி நாளில் குழந்தைகளுக்குப் பல்வேறு போட்டிகள் வைக்கப்பட்டு, பரிசுகளும் வழங்கப்பட்டது. கலந்துகொண்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிசுகளும் வழங்கப்பட்டது. 3 நாட்களும் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும், வருகை புரிந்த அனைவருக்கும் சுவையான சிற்றுண்டியும், தேநீரும் வழங்கப்பட்டது. வருகைபுரிந்த குழந்தைகள் மற்றும் பெற்றோரிடம் feedback கேட்கப்பட்டது. அப்போது பேசிய சில குழந்தைகள், வகுப்புகள் பயனுள்ளதாக இருந்ததாகவும், அடுத்த வருடம் நாட்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். பெற்றோர்களும் இதே கோரிக்கையை கூறினர். நகர சங்கம் சார்பில் மகளிர் அணி பொறுப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். குழந்தைகளுக்கு யோகா வகுப்பு நடத்திய திருமதி. ராஜாத்தி வெங்கடேசன் அவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். 3 நாட்களும் வகுப்புகள் சிறப்பாக நடைபெற அனுமதி கொடுத்து பல வகையிலும் உறுதுணையாக இருந்த நகர சங்கப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் மகளிர் அணி சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

– கோ. அகிலாண்டேஸ்வரி,
மகளிரணி செயலர்

## செம்பனார் கோவில்

செம்பனார் கோவில் நகர கார்காத்த வேளாளர் சங்க கூட்டம் 06.05.2026 அன்று மாலை 6 மணியளவில் நமது சங்கத்தின் வழிகாட்டி திரு. கணபதி நடனம்பிள்ளை அவர்கள் இல்லத்தில் சங்க தலைவர் திரு. M.C.K. இராமநாதபிள்ளை அவர்கள் தலைமையில், இறைவணக்கம் செல்வி A. ஆருத்ரா மற்றும் சஞ்சனபாலா பாடிட, வரவேற்பு செல்வன் A. ஆதித்தியன் நல்கிட சென்ற மாத கூட்டறிக்கை சங்க செயலர் திரு. குரு. முத்துகுமார் அவர்கள் வாசிக்க வரவு/செலவு கணக்கை சங்க பொருளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் சமர்ப்பிக்க கூட்டம் இனிதே தொடங்கியது.

நமது கார்குல சொந்தங்களின் இல்லத்தில் ஏதேனும் துக்க நிகழ்வுகள் நிகழ்ந்தால் அனைவரும் கலந்துகொள்ள முயற்சிக்க வேண்டும் என கூறினார்கள். சங்க உறுப்பினர் திரு. ராஜா அவர்களின் தாயார் திருமதி. விருத்தம்பாள் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு இரங்கல் தீர்மானமும், இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நகைச்சுவை மன்னன் திரு. M. மதியழகன் அனைவரும் மகிழ்வுறும் வகையில் நகைச்சுவை வழங்கி மகிழ்வித்தார்கள்.

திரு. A.M. சேகர் பேசுகையில் வாழ்க்கையில் அனைவரும் விட்டுகொடுத்து செல்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவு ‘‘தட்டி கொடுத்து’’ வாழ்வதும் முக்கியம் என்று பேசினார்கள்.

மகளிர் அணி தலைவி பேசுகையில், மகளிர் தின விழா மிக சிறப்பாக அமைய அனைத்து வகையிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்து கொண்டார்கள்.

திரு. வாசன் பேசுகையில், நமது உடலை பேணி காப்பது மிகவும் முக்கியம் என்றார்கள்.

திருமதி. ரெத்தினாவதி பேசுகையில் நாம் செய்யும், நன்மை தீமை பொறுத்தே நமது வாழ்க்கை அமைகிறது என்று கூறினார்கள்.

திரு. கணபதி நடனம் பேசுகையில், ஆண்டுதோறும் நெடுங்காட்டில் நடைபெறும் ஆண்டு விழாவிற்கு சென்று வருகிறேன் என்றும்,

நெடுங்காட்டு சங்கம் உருவான நிகழ்வுகளையும் பகிர்ந்து கொண்டார்கள். 50ஆவது விழா நடைபெறும் பொழுது 1,00,000/– நன்கொடை தருவதாகவும், நெடுங்காடு சங்க கட்டிடம் கட்ட 50,000/– கட்டிட நிதி தருவதாகவும் தெரிவித்து உள்ளார்கள் என்பதையும் பகிர்ந்தார்கள். செம்பொன் நகர சங்கத்திற்கு கட்டிடம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் என்மனதில் இருந்துகொண்டு இருக்கிறது என்றும் அதற்கான சில நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் பேசினார்கள்.

இல்லத்தார்க்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்திற்கு பிறகு திருமதி. மஞ்சுளா அருணாச்சலம் நன்றி நவில கூட்டம் இனிதே முடிந்தது.

– கி. ராமநாதன், தலைவர்

## பரசலூர்:

3.5.2026 அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு திரு. க. கோவிந்தராசன் தலைவர் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

திருமதி. பானுமதி கோவிந்தராஜன் அவர்கள் இறைவணக்கம் பாட திரு. க. கோவிந்தராசன் பிள்ளை வரவேற்றார்கள். அவர்கள் தலைமையிலேயே கூட்டம் இனிதே துவங்கியது.

செயலர் செந்தில்குமார் பொருளர் சிவக்குமார் அறிக்கை வாசித்தார்கள். தலைவர் மு.அ. நிதிய அறிக்கையை சமர்ப்பித்தார்கள். நிதிய பதிவேடுகள், வரவு செலவு பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டது.

சங்க வளர்ச்சி குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அண்மையில் உடல் நலக்குறைவு ஏற்பட்ட நமது தருமபுரம் 27வது குருமகா சன்னிதானம் அவர்கள் பூரண உடல் நலம் பெற வேண்டி கூட்டுப் பிரார்த்தனை செய்யப்பட்டது.

நிறைவாக இல்லத்தார் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பிஸ்கட் தேநீர் வழங்கி சிறப்பித்தார்கள். திருமதி. விஜயலெட்சுமி விஜய் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்ட முடிவில் பரசலூர் சங்க மு. பொருளர் தெய்வத்திரு ராமலிங்கப்பிள்ளை மனைவியும், பரசலூர் சங்க பொருளர் திரு. சிவக்குமார் அவர்களின் மாமியாரும் திருமதி. சபிதா சிவக்குமார் அவர்களின் தாயாருமாகிய திருமதி. R. முத்துலெட்சுமி ஆசிரியர் அவர்களுக்கு மௌன அஞ்சலி செய்யப்பட்டது.

– S. செந்தில்குமார், செயலர்

9442743002

## 80 இராதாநல்லூர்:

சங்க கூட்டம் 10.5.2026 அன்று சங்க செயலர் இராஜாமுத்தையா அவர்கள் இல்லத்தில் கௌரவத் தலைவர் K. இராமசுப்ரமணியன் அவர்கள் தலைமையில் சங்க தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மே மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்ந்து தெரிவிக்கப்பட்டது. 2026–2027ம் ஆண்டிற்கு மாநில சங்கத்திற்கு இணைப்பு தொகை ரூ. 500/– செலுத்த முடிவு செய்யப்பட்டது. 80 இராதாநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில் தீமிதி உற்சவத்திற்கு உறுதுணையாக இருந்து சிறப்பாக செயல்பட்ட உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சங்க செயற்குழு உறுப்பினர் Er. S. சண்முகம் B.E. நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– T. முத்துக்குமரசாமி,

தலைவர்

9443645646

## பூம்புகார் - மேலையூர்

சங்க கூட்டம் (3.5.2026) அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் செல்வி S. ஹரிணி மற்றும் மழலை M.V. நித்திஷ் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் வரவேற்று பேசினார்.

இந்த மாதம் நமது ஊர் மாரியம்மன் கோவில் தீமிதி திருவிழா சிறப்பாக நடைபெற அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இன்று பிறந்தநாள் கொண்டாடும் (3.5.2026) நமது முன்னாள் பொருளாளர் திரு. T. ஜெயபாலன் ஆசிரியர் அவர்களின் 79ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு சங்கம் சார்பாக வாழ்த்துகளும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் தேநீர் விருந்துடன் பொருளாளர் திரு. R. வெங்கடேசன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– G. விஜயராகவன்,

செயலாளர்

9994635306

## திருவெண்காடு

சங்க மாதந்திர கூட்டம் 17.05.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 04.01 மணிக்கு சங்க தலைவர் கு. சம்பந்தம்பிள்ளை தலைமையில் திருவெண்காடு வடக்கு வீதி ராஜா முத்தையா பிள்ளை இல்லத்தில் அ. பாலசுந்தரம் பிள்ளை வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டது.

கார்காத்த சங்க உறுப்பினர்களுக்கு மே மாத பிறந்தநாள் திருமண நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

சங்க நிகழ்வுகளை பிரசுரித்த கார்குல ஒப்புரவு இதழுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

2026–2027ஆம் ஆண்டிற்கான மாநில இணைப்பு சந்தா ரூ. 500/– செலுத்திட ஏற்பளிக்கப்படுகிறது.

பெருந்தோட்டம் ஸ்ரீமகா மாரியம்மன் சீதளா தேவிக்கு தீமிதி திருவிழா 10.05.2026 மாலை 06.00 மணிக்கு மேல் நடைபெற்றது. கார்குல உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கலந்துகொண்டனர்.

பெருந்தோட்டம் நினைவில் வாழும் பாலவேலாயுதம் பிள்ளை – சரஸ்வதி தம்பதியினரின் மகன் மோகன் 29.04.2026 அன்று மரணமடைந்தமைக்கு உறுப்பினர்கள் அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தினர்.

சங்க பொருளர் ம. ராமு வரவு செலவு படிக்க ஏற்பளிக்கப்பட்டது. அவர் சார்ந்து நன்றியுரை வழங்க கூட்டம் இனிதே முடிவுற்றது.

– K. சம்பந்தம்பிள்ளை, தலைவர்

## கும்பகோணம்:

சங்க கூட்டமும் பசிப்போர் புசிக்க அன்னம்பாளிப்பு ஆயிரமாவது நிகழ்வை முன்னிட்டும் அக்குழுவினருக்கு பாராட்டு விழாவும் நாணயக்கார தெரு ஏ.எஸ்.கே. இல்லத்தில் காலை 9.30 மணி அளவில் தலைவர் ஏ.எஸ். பழனி அவர்கள் தலைமையில் துணைத் தலைவர் எம். பாலகுரு அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைவரின் தலைமை உரைக்கு பின் செயலாளர் உரையுடன் பொருளாளர் ராஜாராம் அனுமதியுடன் ஏப்ரல் மாதம் நடைபெற்ற மங்கல சந்திப்பு வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் பசிப்போர் புசிக்க குழுவினரின் இந்த ஆயிரமாவது நிகழ்வுகள் குறித்து பாராட்டி மகிழ்ந்தனர். குழுவினருக்கு வடபழனி இளங்கோ வாழை இலை வடிவில் கவிதையுடன் நினைவு பரிசு வழங்கினார்கள்.

நமது சங்க உறுப்பினர்கள் திருமதி. சுந்தரி விஸ்வலிங்கம் மறைவுக்கும் மற்றும் வி. சொக்கலிங்கம் மறைவிற்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தின் முடிவில் பசிப்போர் புசிக்க குழு தலைவர் குணசீலன் அவர்கள் ஏற்புரை மற்றும் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– எஸ். விஜயகுமார், செயலாளர்

## திருக்குடந்தை நகர் மற்றும் புறநகர்:

சங்க பொதுக்குழு கூட்டம் வெங்கடாசலம்பிள்ளை சத்திரத்தில் 16.05.2026 அன்று சங்கத்தின் நிறுவனத்தலைவர் திரு. தி.மா. வைத்தியநாதன் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.சங்கத்தின் உறுப்பினர் திருப்பனந்தாளை சேர்ந்த T.D.B. ஞானசேகர்–நீலாவதி அவர்களின் மகன் S. குணா ராமகிருஷ்ணன் +2 தேர்வில் 572/600 மதிப்பெண் பெற்றதை பாராட்டி, பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கௌரவத்தலைவர்கள் : இரா. கல்யாணசுந்தரம்பிள்ளை, பாலாக்குடி, P.S. வெங்கடசலம்பிள்ளை, அரசூர், அவைத்தலைவர் : T.S. சுவாமிநாதன் பிள்ளை, திருவிசநல்லூர், தலைவர் : ம. சந்திரமோகன் பிள்ளை, கொண்டாங்குடி, செயலர் : TR. மகேந்திரன் பிள்ளை, திருப்பனந்தாள், பொருளாளர் : பேரா. கோ. சடகோபன் பிள்ளை, கும்பகோணம், செயல் தலைவர் : TMS. கண்ணன் பிள்ளை, திருப்பனந்தாள், துணைத்தலைவர்கள் : TN. விஸ்வநாதன் பிள்ளை, திருவிசநல்லூர், Er. S. செல்வமுத்துகுமார், திருப்பனந்தாள், இணைச்செயலர் : S. சுவாமிநாதன் பிள்ளை, கும்பகோணம், துணைச்செயலர்கள் : N. கல்யாணசுந்தரம் @ பாபு, திருப்பனந்தாள், S. செந்தில்குமார், நாச்சியார்கோயில், மகளிர் அணி தலைவியாக : திருமதி. ஹேமா மகேந்திரன், திருப்பனந்தாள் மற்றும் ஆலோசனைக்குழு, செயற்குழு, மகளிர் ஆலோசனைக்குழு, மகளிர் அணி அமைக்கப்பட்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

– TR. மகேந்திரன் பிள்ளை, செயலர்

## திருச்சி:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 08.05.2026 வெள்ளிக்கிழமை திருச்சி ஹோட்டல் ஆனந்த்–ல் நடைபெற்றது. திருச்சி சங்கத்தின் சிறப்பு நிகழ்வான 23வது ஆண்டு மங்கல சந்திப்பும், சங்கத்தின் ஆண்டு விழாவும் ஆகஸ்ட் 15, 2026 அன்று நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த ஆண்டு மங்கல சந்திப்பில் பெரிய LED திரையில் வரன்களை அறிமுகப்படுத்தலாம் என்ற ஆலோசனை செயற்குழுவால் வரவேற்கப்பட்டு ஏற்கப்பட்டது.

அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார்கள்.

C. சுப்ரமணியன்,

செயலாளர்

## ஈரோடு:

08.03.26 அன்று சங்கத்தின் மாதாந்திர நிர்வாக குழு கூட்டம் 41, E.V.R. வீதி, கள்ளுக்கடை மேடு, ஈரோடு என்கிற இடத்தில், தலைவர் திரு. A. தேவேந்திரன் அவர்கள் தலைமையில் செயலாளர் திரு. பால்ராஜ் அவர்கள் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்கத்தின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் பற்றி விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது.

நம்முடைய சங்க உறுப்பினர்களின் மாணவ செல்வங்களுக்கு கல்லூரியில் படிப்பவர்களுக்கு இந்தாண்டு கல்வி ஊக்கத் தொகை அளித்த CREW அறக்கட்டளை கொடைவள்ளல் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கும் திரு. முத்துகுமாரசாமி பிள்ளை அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மாநில சங்கத்தலைவரின் மனைவி கடந்த 20.12.25 அன்று காலமானதை ஒட்டி இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த வருட ஆண்டு விழா நடத்துவது என முடிவு செய்யப்பட்டு, இந்த விழாவிற்கு தலைமை சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோரை சிறப்பு விருந்தினராக அழைப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– S. பால்ராஜ்,

செயலாளர்

## கோவை

கடந்த மாதம் தீர்மானித்தப்படி இம் மே மாதக் கூட்டம் திரு. K.R. சிவராஜகோபால் இல்லத்தில் 10ஆம் தேதி மாலை CREW Trust மூலம் கல்வி உதவி பெற்று கல்வி பயின்ற/பயிலும் மாணவ மாணவியர் குடும்பங்களின் சந்திப்பாக நடைபெற்றது.

சில மாணவ மாணவியர் பெற்றோர்களுடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நமது கார்குல வள்ளல் திரு. ச. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கும் CREW Trust நிறுவனத்திற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

CREW Trust உதவியை நமது சங்கம் பாலமாக இருந்து பெற்றுத் தந்தது. பிற்கால மாணவர்களுக்கும் தொடர இன்றைய இளம் தலைமுறையினர் சங்க நடவடிக்கைகளில் பங்கேற்று செயல்பட வேண்டிய அவசியம் எடுத்துரைக்கப்பட்டது.

செல்வி ஸ்ருதி கண்ணா என்ற மாணவி தனது சில கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்ய பகுதி நேரமாக கேக் செய்து விற்பனைச் செய்து வருகிறார். அவரது Brownie Cakeஐச் சுவைத்த அனைவரும் பாராட்டி அவரது வளர்ச்சிக்கு வாழ்த்தினர்.

முன்னதாக கலைஸ்ரீ, ரம்யஸ்ரீ சகோதரிகளின் இறைவணக்கத்துடன் துவங்கி, மாணவ மாணவியரின் தங்கள் சுய அறிமுகம் மற்றும் குடும்பத்தாரின் அறிமுகம் எனத் தொடர்ந்து திரு. சிவராஜகோபால் மற்றும் திருமதி. சுந்தரி சிவராஜகோபால் ஆகியோரின் SKC உபசரிப்பில் மகிழ்ந்து திரு. G. குமாரசாமி அவர்களின் நன்றியுரையுடன் சிறப்பாக நிறைவுற்றது.

– S. வள்ளிநாயகம்,

செயலாளர்

## வாழ்த்துகிறோம்

சீர்காழி, கன்னியாகுடி கிராமம் திரு. S. நடராஜன்பிள்ளை, திருமதி. ராஜகுமாரி இவர்களின் மகன் திரு. N. நவீனுக்கும் திருக்கோவிலூர் சோமாஸ்ரீர் K. வெங்கடேசம் பிள்ளை திருமதி சிவகாமசுந்தரி இவர்களின் மகள் செல்வி V. சுயஸ்ரீக்கும் 25.03.2026 விருத்தாசலம் இராணி மஹாலில் நடைபெற்ற திருமணத்தில் சங்கத்தின் சார்பாக கலந்துகொண்டு சந்தனமாலை அணிவித்து, வாழ்த்து மடல் வாசித்து அளிக்கப்பட்டது.

## ஸ்ரீ பக்த ஏகநாதர் (தொடர்ச்சி)

– லலிதா வேலாயுதம்

ஸ்ரீ ஏகநாதர் ராமாயணக் காவியத்தை பண்டரிநாத ஆலயத்தில் அரங்கேற்றுவதைக் காண அவரின் குருவும், தத்தாத்ரேயரும் வந்திருந்தார்கள். பக்தகோடிகள் மெய்மறந்து பேரின்பத்தில் திளைத்தனர். ஒரு சில நாட்களில் ஸ்ரீமத் பாகவதத்தையும் பக்தி சிரத்தையுடன் இறைவன் அருளால் எழுதி முடித்து, பண்டரிநாதரின் சந்நிதியில் அரங்கேற்றம் செய்தார். இராமாயணத்தையும், பாகவதத்தையும் தம்புரா மீட்டி சிப்ளாக்கட்டையால் தாளம் போட்டு மிக அற்புதமாக பாடிப் பக்தர்களைப் பரவசமுறச் செய்தார். அனுதினமும் அவரது இல்லத்தில் எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்வித்து, அலங்கார, தீப தூப ஆராதனை செய்து, நைவேத்ய பிரசாதத்தைப் பக்தர்களுக்கு வழங்கினார்.

துவாரகாதீசன் ஸ்ரீ ஏகநாதரின் பாகவத அமிர்தத்தை அருகிலிருந்து அள்ளிப் பருக திருவுள்ளம் கொண்டு, ஒரு அந்தண பிரம்மச்சாரி சிறுவனாக, கண்டியா கிருஷ்ணனாக அவரது இல்லத்திற்கு வந்தார். ''உங்களது பக்தி, பரோபகாரம், சாதிபேதம் பாராது அனைவருக்கும் உதவும் தன்மை போன்ற உயர்குணங்களை அறிந்தேன். தங்களுக்குப் பணிவிடை செய்ய விரும்புகிறேன். எனக்கு உற்றார், உறவினர் எவருமில்லை. நான் செய்யும் பணிக்கு கூலி எதுவும் வேண்டாம்; பசிக்கு அன்னமிட்டால் போதும்'' என்று கூறி வணங்கி நின்றார். கண்டியா கிருஷ்ணனின் வசீகரமான தோற்றமும், ருசிகரமான பேச்சும், விநயமும் மிகவும் பிடித்துப்போக, ஸ்ரீ ஏகநாதர் அவரை வேலைக்குச் சேர்த்துக்கொண்டார். குருவாயூரப்பன் வில்வமங்கலசுவாமிகள் இல்லத்திலும், குரூர்தேவியார் இல்லத்திலும் ஓடியாடி விளையாடியது போல, இவரும் ஏகநாதர் இல்லத்தில் ஓடி விளையாடி கூடி மகிழ்ந்திருந்தார்.

பூஜைக்கு திருமஞ்சனநீர் கொண்டு வருவது, பூப்பறித்து வைப்பது, நிலம் மெழுகி மாக்கோலம் இடுவது, நிவேதனம் தயாரிப்பதில் ஏகநாதரின் மனைவிக்கு உதவியாக இருப்பது போன்ற வேலைகளைச் செய்ததுடன், அவர் உபந்நியாசம் செய்யும்போது விசிறி கொண்டு வீசும் பணியையும் செய்து வந்தார். அவரின் இசையைக் கேட்டு தனது திருக்கழுத்தை அழகாக அசைத்து ரசிப்பார். இவ்வாறு ஒரு வருடம், இரு வருடம் அல்ல; 12 வருடங்கள் ஸ்ரீ ஏகநாதரின் இல்லத்தில் பெருமான் சேவை சாதித்து வந்தார்.

ஒருமுறை ஏகநாதரின் தந்தையாரின் சிரார்த்தம் வந்தது. அதற்காக செய்யப்பட்ட தளிகையின் நறுமணம் தோட்டத்தில் குடியிருந்த தோட்டக்காரனின் மனைவியின் மூக்கைத் துளைக்க அவள் ''என்ன ஒரு வாசனை! இப்பேர்ப்பட்ட உணவை உண்ண கொடுத்து வைத்திருக்க வேண்டுமே'' என்றாள். அவளின் கணவன், ''திதிக்காக செய்யும் உணவை நம் போன்ற தாழ்ந்த குலத்தோர்க்கு கொடுப்பது பாவம்; உண்பது நமக்கும் பாவம்!'' என்றான். அதைக் கேட்ட ஏகநாதர் ஒரு ஆன்மாவின் விருப்பத்தை பூர்த்தி செய்யாவிடில் அதுவும் பாபமாயிற்றே என்று எண்ணி, தனது மனைவியிடம் கூற, அவரும் சந்தோஷத்துடன் மீண்டும் வேறு தளிகை செய்துகொள்ள சம்மதித்து, அந்த உணவை தோட்டக்காரனின் குடும்பத்தினருக்கு அனைத்தையும் கொடுத்தனுப்பினார். பின் மீண்டும் குளித்து, மடியாக அமுது செய்யத் தொடங்கினார்.

சிரார்த்தத்திற்காக வந்திருந்த அந்தணர்கள் கடும் கோபம் கொண்டு, உணவை மறுத்து, எப்படி சிரார்த்தம் நடக்கும் என்பதனைப் பார்க்க திண்ணையில் அமர்ந்தனர். கண்டியா கிருஷணனோ, ஏகநாதரிடம், ''மெய்யன்போடு பிரார்த்தனை செய்யுங்கள்; விஷ்ணு இலைக்கு அந்த பண்டரிநாதனும், விஸ்வதேவ இலைக்கு பரமேசுவரனும், பித்ரு ஸ்தானத்திற்கு தங்களின் தந்தையார் சூரியநாராயணரும் வருவர்'' என்று கூறவும், அவரும் பூஜையில் உட்கார்ந்து தியானத்தில் அமர்ந்தார். மூவரும் வந்தமர்ந்து அமுது செய்யலாயினர். வெளியே அமர்ந்திருந்த அந்தணர்கள் உள்ளே எட்டிப்பார்க்க, அமுதுண்ணும் சிவனும், ஹரியும் கணப்பொழுது காட்சி அளிக்கவும் நடுங்கிவிட்டனர். இருந்தும் அவர் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென கூறி, கங்கையில் மகாசங்கல்பம் செய்து, தீர்த்தத்தில் மூழ்கி, தீட்டினைக் கழிக்கவேண்டும் என கூறினர். அவர்கள் கங்கா நதிக்குச் செல்லவும், சற்று அருவருப்பான ஒரு தோற்றத்துடன் அங்கு வந்த ஒரு அந்தணர், ஸ்ரீ ஏகநாதர் எனும் பக்த சிரோன்மணி யார் என வினவவும், அந்தணர்கள் என்ன காரியத்திற்காக கேட்கிறீர்கள் என கேட்டனர். எனது பூர்வஜன்ம கர்மபலனால் இக்கொடிய நோயால் அவதிப்படுகிறேன். சிவபெருமானை நோக்கி தவம் செய்ததன் பொருட்டு, அசரீரியாக அவர் ஏகநாதர் பித்ருக்களுக்காக செய்த உணவைப் பஞ்சமனுக்கு அளித்தது எமக்கு பரம திருப்தியை அளிக்கிறது. அவர் பெற்ற புண்ணியத்தில் ஒரு குழந்தைக்கு இட்ட தானப் பலனைப் பெற்று வரின், உங்கள் தோற்றம் சீர்படும் என்றார். அதைக்

கேட்ட ஏகநாதரும் மிகவும் மகிழ்ச்சியோடு அப்பலனை தாரைவார்த்துக் கொடுக்கவும், அந்தணர் நோய் நீங்கப்பெற்று பேரழகோடு விளங்கினார். இவ்வற்புதத்தைக் கண்டு மற்ற அந்தணர்கள் ஸ்ரீ ஏகநாதரின் பெருமையை அறிந்தனர்.

இந்நிலையில் துவாரகையில், மதன் எனும் பக்தர் கண்ணனின் தரிசனம் காண பல வருடங்கள் வேண்டியபடி இருக்க, அவர் கனவில் தோன்றிய கண்ணன், ''நான் பைத்தானில் ஏகநாதர் எனும் அடியார் வீட்டில் கண்டியா எனும் பெயரில் உள்ளேன். அங்கு சென்று தரிசனம் பெறுவாயாக!'' என்று கூறி மறைந்தார். பிரமித்த அப்பக்தர் பைத்தான் வந்து, கோதாவரியில் நீராட, அங்கு வந்த சிறுவனிடம் ஏகநாதர் வீடு எங்கே உள்ளது எனக் கேட்க, அவன் நீர் எடுத்துக்கொண்டு அவரையும் அழைத்துச் சென்றான். ஏகநாதரைப் பார்த்ததும் மதனின் மேனி சிலிர்க்க, நமஸ்கரித்து, துவாரகா கண்ணன் உங்கள் வீட்டில் உங்களுக்குப் பன்னிரண்டு வருடங்களாக பணிசெய்து வரும் பாக்கியத்தைப் பெற்றுள்ளீர்கள் என்கிறார்.இப்பன்னிரண்டுவருடங்களாகஇறைவனை அறிந்துகொள்ளவில்லையே! என மனம் வருந்த அங்கு வந்த கண்டியா இருவருக்கும் கிருஷ்ணராக காட்சி தந்து பூஜையறையில் சென்று மறைந்தார்.

ஒருநாள் இரவு அவரது கனவில் ஸ்ரீ ஞானேஸ்வரர் எழுந்தருளி அனகாபுரியிலுள்ள அவரது முக்தி பீடத்தை புனருத்தாரணம் செய்யும் பணியை மேற்கொள்ளவும், அங்கு வளர்ந்து வரும் அரசமரத்தைப் பெயர்த்து வேறு இடத்திற்கு மாற்றவும் கூறுகிறார். ஏகநாதர் தற்போதைய ஆலந்தியை அடைந்து புனருத்தாரண வேலையை ஆரம்பித்தார். அது ஒரு கிராமம். ஆதலால் குடி தண்ணீர், உணவு கிடைப்பதும் சிரமமாக இருந்தது. எம்பெருமானே ஒரு மாட்டு வண்டியில் உணவு வகைகள், பழங்கள், குடிநீர் கொண்டு வந்து வேலை முடியும் வரை அளித்து வந்ததுடன், அதற்கான தொகையைக் கடைசியாக வாங்கிக்கொள்வதாக கூறி, கடைசி நாளில் அந்தர்த்தியாமியானார். ஏகநாதர் பெருமானின் பாசுரங்களை இனிமையாகப் பாடிப் பரவினார்.

குரு ஜனார்த்தனர் சுவாமி தத்தாத்ரேயர், பாண்டுரங்க விட்டலன் யாவரும் ஒருவரே என்றுணர்ந்தார். பக்தனுக்குப் பகவானைத் தவிர வேறொன்றிலும் நாட்டமில்லை; அதுபோல பகவானுக்கும் பக்தனைத் தவிர வேறெதிலும் விருப்பமில்லை என்பதை உலகுக்கு ஸ்ரீ ஏகநாத சுவாமிகள் மூலம் உணர்த்தி உள்ளார். இவரால் இயற்றப்பட்ட பாகவதமும், ராமாயணமும், பகவத் கிருதிகளும் இன்றளவும் பூவுலகில் ஒலித்துக் கொண்டுள்ளது.

ஸ்ரீ பக்த ஏகநாதரின் திருவடிகளே சரணம்!

---

## அம்மா

அம்மா சொன்ன அற்புதமான பொய்களில் ஒன்று: கடைசி உருண்டையில் தான் எல்லா சத்தும் இருக்கும். இத மட்டும் வாங்கிக்கோடி கண்ணா!

நாம் பெற்ற முதல் ரத்த தானம், அம்மாவின் பால்தான்.

தன் அம்மா தனக்கு என்னவெல்லாம் செய்தால் என்பதை, மனிதன் கடைசி வரை உணர்வதில்லை. அவன் உணரும் போது, அம்மா உயிரோடு இருப்பதில்லை.

சொல்ல வந்ததை சரியாக சொல்ல முடியாமல் தவித்து நின்று பார். தாய்மொழியின் அருமை புரியும். தாயை விட்டு தள்ளி இருந்து பார். தாயின் அருமை புரியும்.

ஓர் அம்மாவின் இறுதி ஆசை என் மண்ணறையின் மீது உன் பெயரை எழுதி வை. உன்னை நினைக்க அல்ல. அங்கும் உன்னைச் சுமக்க!

குழந்தை ஒருமுறை அம்மா என அழைக்க, பிரசவ நேரத்தில் ஆயிரம் முறை அம்மா, அம்மா என்று கதறியவள் தான் அம்மா.

குழந்தைகளின் பல்வேறு அழுகைகளின் அர்த்தம் புரிந்த ஒரே அகராதி அம்மா மட்டும் தான்.

கடைசி தோசை சாப்பிடும் போது, சட்னியை வேண்டுமென்றே அதிகமாக வைத்து, அதை காலிசெய்வதற்காகவே இன்னொரு தோசை வைப்பது தான் அம்மாவின் அன்பு.

உலகில் தேடித் தேடி அலைந்தாலும், மீண்டும் அமர முடியாத ஒரே சிம்மாசனம் அம்மாவின் கருவறை.

வாழ்க்கையில் தியாகம் செய்பவர் அப்பா. வாழ்க்கையையே தியாகம் செய்பவர் அம்மா.

நோய் வரும்போது ஓய்வுக்கு பாயைத் தேடுவதை விட, தாயைத் தேடுது மனம்.

– கீரந்தங்குடி நீலா ராஜசேகரன்,
கும்பகோணம் – 2.

## சங்கப்பலகை

**பங்கு பெறுவோர்:** தீபிகா, மீனா, ஆண்டாள், வசுமதி, பிரியா, சித்ரா, மீரா, கௌரி, கோமதி.

**இடம்:** இந்திரா நகரில் உள்ள தீபிகாவின் இல்லம்.

தோழிகள் மாலை சுமார் 5 மணி அளவில் கூடுகின்றனர்.

தீபிகா: வாங்க! வாங்க! முதல்ல டிபன், காபி எடுத்துக் கொண்டு நம் கச்சேரியை ஆரம்பிக்கலாம்.

ஆண்டாள்: காபி மட்டும் இப்ப எடுத்துப்போம். டிபன் போகும்போது எடுத்துக்கலாம்.

அனைவரும் காபி எடுத்துக் கொண்டதும், உரையாடல் ஆரம்பிக்குது.

பிரியா: ஆண்டாளக்கா! ஜூன் மாசம் விசேஷம் கூறுங்க!

ஆண்டாள்: போன வருஷம் கூறினதுதான். சிதம்பரத்தில் நடக்கும் ஆனித்திருமஞ்சனமும், ஆனி உத்திர விழாவும்தான் விசேஷம். ரெண்டு நாளைக்கு முன்னே மயிலாப்பூர் போனேன். அன்றைக்கு வெள்ளீஸ்வரர் கோவிலில் புறப்பாடு இருந்துச்சு. நல்ல கூட்டம்.

கோமதி: நான் அடையாறுக்கு ஷிப்ட் பண்ணிட்டேன். பாம்பன் சுவாமி கோவிலிலும் ஏதோ விசேஷம். குரு பூஜை போல இருக்கு. ஜே! ஜே! என இருந்தது.

சித்ரா: அவரது ஜீவசமாதி இங்க இருக்கு. அந்த கோவிலில் பௌர்ணமி பூஜை மிகவும் சிறப்பானதாகும். குருபூஜை வைகாசி விசாகத்தன்று நடக்கிறது. அதான் கோவில்ல கூட்டமா இருந்திருக்கும். சஷ்டி, கிருத்திகையும் இப்பல்லாம் கூட்டம் நிறைய வருது.

ஆண்டாள்: இப்பல்லாம் எல்லா கோயில்லேயும் கூட்டம்தான். சிதம்பரம் பெரிய கோவிலைப் பத்தி நிறைய சொல்லிட்டேன். அதனால தில்லை காளியம்மன் பத்தி கொஞ்சம் சொல்றேன். சக்தி தேவியே காளியாக, தில்லைக் காளியாக அருள்புரிகிறாள். சிதம்பரத்தில் சிவனுக்கும், காளிக்கும் நடந்த நடனப் போட்டியில், சிவன் ஊர்த்துவ தாண்டவமாக ஒரு காலை நேரே உயரத் தூக்க, காளிதேவி அவ்வாறு தூக்க இயலாமல் தோல்வியுற்று, தில்லைக்காளியாக ஊரின் எல்லையில் கோவில் கொண்டாள். அவளை பிரம்மா சாந்தப்படுத்த புகழ்ந்து பாடி, பிரம்ம சாமுண்டீஸ்வரி என்ற பெயரிலும் சந்நிதி கொண்டுள்ளாள். ஞாயிறு ராகு காலம், பவுர்ணமி, அமாவாசை அன்று சிறப்பு பூஜை நடைபெறுகிறது. இங்கு குங்கும அர்ச்சனை செய்பவர்களின் குறைகளைத் தீர்க்கிறாள். மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தரிசிக்க வேண்டிய தெய்வம். இங்கு பெண் வடிவில் தட்சிணாமூர்த்தி அருள்கிறார். அவரை கடம்பவன தட்சிணரூபிணி என்பர்.

வசுமதி: ரொம்ப தாங்ஸ் அக்கா. நான் கோவில்லருந்து வானிற்குப் போறேன். சந்திரயான் 4 திட்டத்துக்கு இன்னும் இரு ஆண்டுகள் உள்ள நிலையில், நிலவின் தென்துருவ பகுதியில் விண்கலம் தரை இறங்குவதற்கான இடத்தை இஸ்ரோ அடையாளம் கண்டுள்ளது. இந்த விண்கலம் நிலவின் மண்ணைச் சேகரித்து கொண்டு மீண்டும் பூமிக்கு வரும். விண்கலம் நிலவில் தரையிறங்குவதற்கான இடமென தென் துருவத்தில் எம்.எம். எனப்படும் 'மான்ஸ் மவுட்டன்' என்ற பகுதியினைத் தேர்ந்தெடுத்துள்ளது. இப்பகுதியில் பள்ளங்கள் மற்றும் பாறைகள் மிக குறைவாக இருப்பதால் நிலைதடுமாறாமல் தரை இறங்க இயலுமென எண்ணுகின்றனர்.

கோமதி: நானும் விண்வெளியைப் பற்றிய செய்தியையே சொல்றேன். சூரிய மண்டலத்தில் மிக அபாயகரமான பகுதியாக பூமிக்குச் சற்று மேலே உள்ள விண்வெளிப்பகுதி மனித நடவடிக்கைகளாலும், அண்டவெளிக் காரணங்களாலும் மாறிவிட்டது என டாக்டர் ஜரோஸ்லாவ் பௌப்ளிக் எழுதியுள்ளார். அன்றாட ஜி.பி.எஸ் தொலைத்தொடர்பு மற்றும் நிதி பரிவர்த்தனைக்குத் தேவையான செயற்கை கோள்கள் வலம் வருவது இப்பகுதியில்தான். மேலும் அடிப்பகுதியில்தான் லட்சக்கணக்கான விண்வெளிக் குப்பைகள் மணிக்கு 28,000 கி.மீ. வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஒரு சிறிய துண்டு மோதினாலும் விண்கலங்கள் சிதறி, மேலும் குப்பைகள் அதிகமாகும். எதிர்காலத்தில் விண்வெளியில் இது ஒரு சங்கிலித்தொடர் விபத்துக்கு வழிவகுக்கும் என்கிறார் அவர். மேலும் ஒரு பாதுகாப்பற்ற சுற்றுப்பாதையைச் சார்ந்து நாம் வாழத் தொடங்கி இருப்பது பெரும் ஆபத்தே என பௌப்ளிக் எச்சரிக்கிறார்.

மீரா: நான் படிச்சதைச் சொல்றேன்ப்பா! ஜப்பானிய விஞ்ஞானிகள் செயற்கைத் தோல் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அதைத் தோலில் பதித்துவிடில், ரத்தத்தில் நோய் அறிகுறிகள் தென்பட்டால் இந்த செயற்கைத் தோல் பச்சை நிறத்தில் ஒளிருமாம். இன்னொன்றையும் சொல்லிடறேன். இண்டக்ஷன் அடுப்புகளுக்கு உள்ளேயே ரீசார்ஜ் செய்யக்கூடிய பேட்டரியைக் கொண்ட புதியவகை அடுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது சாதாரண பிளக்பாயிண்ட்களிலேயே இயங்குமாதலால் நடுத்தர மக்களுக்கும் மின்சார சமையல் எளிதில் சாத்தியமாகும்.

மீனா: அமெரிக்காவின் M.I.T. விஞ்ஞானிகள் ரத்தத்தை எடுக்காமலே, அகச்சிகப்பு ஒளியைப் பயன்படுத்தி, சர்க்கரை அளவைக் கண்டறியும் கருவியை உருவாக்கி உள்ளனர். அரிதான நிறைய ரத்த வகைகளைக் கண்டுபிடித்திருப்பதாக படித்தேன். யாருக்காவது அது பற்றி தெரியுமா?

சித்ரா: தாய்லாந்து சிரிராஜ் மருத்துவமனை ஆராய்ச்சியாளர்கள் உலகில் மூன்று பேருக்கு மட்டுமே அரிதிலும், அரிதான ரத்த வகை இருப்பதை

கண்டுபிடித்துள்ளனர். ஏ, பி ஆன்டிஜென்கள் மற்றும் ஆர்.எச். காரணிகளின் கலவையில் ஏ, பி, ஏபி, ஓ என்ற குழுக்கள் நெகட்டிவ், பாசிட்டிவ் என எட்டாக ரத்த வகைகள் பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது பி(ஏ) என்ற வகை ஏ, பி, ஓ மரபணுவின் மாற்றமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த ரத்தத்தில் 'பி ஆன்டிஜென்களுடன் 'ஏ' ஆன்டிஜென்களின் தன்மை சிறிது இருந்ததால் குழப்பம் ஏற்பட்டதாகவும், இந்த இரத்த வகை தோராயமாக 1,80,000 பேரில் ஒருவருக்கு காணப்படும் மரபணு வினோதம் என்று கூறியுள்ளனர். உலக மக்கள் தொகையில் 7% மட்டுமே 'ஓ' நெகட்டிவ் காணப்படுகிறது. அவர்கள் உலகளாவிய நன்கொடையாளர் ஆவர்.

மீனா: எனக்கும் ஞாபகம் வந்துடுச்சு! நான்மீதியைச் சொல்றேன். தங்க ரத்தம் என்று சொல்லப்படும் ஆர்.எச். பூஜ்யம் என்ற ரத்த வகை உலகில் 50 பேருக்கு மட்டுமே உள்ளது. இதில் எந்த ஆன்டிஜென்களும் இல்லாததால் அரிதாக பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய நாடான பிரான்சின் குவாடலுப் தீவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு 'குவாடா நெகட்டிவ்' என்ற அரிய வகை ரத்தம் கண்டுபிடிக்கப்பட்டது. கர்நாடகாவின் கோலாரில் 38 வயதுடைய ஒரு பெண்ணுக்கு 'கிரிப்' என்ற மிகவும் அரிதான ரத்த வகை இருப்பது 2025ஆம் ஆண்டு துவக்கத்தில் கண்டறியப்பட்டது. இயற்கையின் வினோதங்கள் தான் எத்தனை ?

தீபிகா: ஆப்பிள் சாகுபடியில் அசத்தும் ஆந்திரா குறித்து சொல்றேன். காஷ்மீர், ஹிமாச்சல் போன்ற குளிர் பிரதேசத்தில் விளையும் ஆப்பிள் பழங்களை, வறண்ட வானிலை மற்றும் வெப்பம் நிறைந்த ஆந்திராவின் ராயலசீமா பகுதியான அனந்தப்பூர் மாவட்டத்தில், ரமணரெட்டி என்ற விவசாயி விளைவித்து சாதனைப்படைத்துள்ளார். கே.எல்.டி. எனும் இந்த நவீன ரக ஆப்பிள் கன்றுகளை இஸ்ரேலில் இருந்து தருவித்துள்ளார். தோட்டக்கலைத் துறையின் பரிந்துரையின் வண்ணம் அதனைப் பயிரிட்டு வெற்றி பெற்றுள்ளார். இவ்வகை இரண்டு வருடங்களில் காய்க்கிறது. குளிர் மலைப் பிரதேசத்தில் ஆப்பிள்கள் காய்க்க ஏழு முதல் எட்டு ஆண்டுகள் ஆகும். ஆனால் அதிக நீர் தேவைப்படுமென்பதால், சொட்டு நீர் பாசன முறை அவசியமென தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தி உள்ளது.

கௌரி: T.V. பார்ப்பதால் ரத்த சர்க்கரை உயர்வதாக படிச்சேன். நீண்ட நேரம் T.V. பார்ப்பது, மணிக்கணக்கில் மொபைல் பயன்படுத்துவது, கம்ப்யூட்டரில் தொடர்ச்சியாக வேலை செய்வது டைப் 2 சர்க்கரை நோயாளியின் ரத்த சர்க்கரை அளவை மோசமாக பாதிக்கிறது என ஆய்வில் தெரியவந்துள்ளது. T.V. பார்க்கும் நேரத்தை 30 – 45 நிமிடங்களாக குறைத்ததும், 3 மாதங்களுக்குப் பிறகு ரத்த சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருப்பது தெரியவந்துள்ளது. காலையில் எழுந்ததும் முதல் 1 மணி நேரமும் இரவில் தூங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவும் T.V., மொபைல் பார்ப்பதை தவிர்ப்பது நல்லது.

பிரியா: இன்டர்நேஷனல் கரன்சியாக டாலரும், யூரோவும் விளங்குகின்றன. ஐரோப்பிய யூனியனில் 21 நாடுகள் யூரோவை கரன்சியாக ஏற்றுக்கொண்டுள்ளன. 21ஆவது நாடாக பல்கேரியா விளங்குகிறது. பல்கேரியாவின் கரன்சி லெவ். அதற்குப் பதில் யூரோவைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 27 உறுப்பு நாடுகள் கொண்ட ஐரோப்பிய யூனியனில் செக் குடியரசு, ஹங்கேரி, டென்மார்க், போலந்து, ருமேனியா மற்றும் ஸ்வீடன் ஆகிய ஆறு நாடுகள் மட்டும் தங்கள் சொந்த கரன்சியைப் பயன்படுத்துகின்றன.

கௌரி: நெதர்லாந்து லெய்டன் பல்கலைக்கழகத்தில் 300 ஆண்டுகளாகக் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த தமிழகத்தின் வரலாற்றுப் பொக்கிஷமான ஆனைமங்கலம் செப்பேடு மத்திய அரசின் நடவடிக்கையில் இந்தியா திரும்பி வர உள்ளது. நாம் இதைப் பத்தி டீடெய்லாக சில மாதங்களுக்கு முன் பேசியுள்ளோம் என்பது என் நினைவு.

வசுமதி: ஆமாம்பா! எனக்கும் லேசா ஏதோ சோழ ராஜாவின் செப்பேடு என பேசிய ஞாபகம். நான் ஒரு சாதனையைப் பற்றி சொல்றேன். அதிக முறை எவரெஸ்ட் ஏறி புதிய உலக சாதனையை நேபாளத்தைச் சேர்ந்த மலை ஏறும் வீரர்களான காமிரீட்டா ஷெர்பா 32 முறையும், லக்பா ஷெர்பா 11 முறையும் எவரெஸ்ட் மலை ஏறி சாதனை புரிந்துள்ளனர். இவர்கள் சர்வதேச மலையேற்ற வீரர்களுக்கு வழிகாட்டிகளாக உள்ளனர்.

கோமதி: பிராட் குரூப் ஹோலன் எனும் கட்டுமான நிறுவனம் ஐந்தே நாளில், 100 தொழிலாளர்களை வைத்து, இயந்திரங்களின் உதவியுடன், 26 மாடி கட்டிடத்தை சீனாவில் கட்டியிருப்பது, உலகையே திரும்பி பார்க்க வைத்துள்ளது.

பிரியா: செர்பியா நாட்டில் நடைபெற்ற (under 12) Rapid சதுரங்க போட்டிகளில் வெற்றிகளைப் பெற்று, உலக அரங்கில் இந்தியாவின் தேசிய கீதத்தை ஒலிக்க விட்டு நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார். A.S. சர்வாணிகா.

சித்ரா: சீனாவில் நடந்த ஆசிய பீச் விளையாட்டு 6ஆவது சீசனின் பெண்களுக்கான கபடி போட்டியில் இலங்கையை வீழ்த்தி இந்திய அணி தங்கம் வென்றுள்ளது. சரி! நிறைய பேசிட்டோம். தீபிகா! டிபனை எடுத்துட்டு வாப்பா! சாப்பிட்டு கிளம்புறோம்!

ஆண்டாள்: அடுத்த மீட்டிங் யார் வீட்ல ?

பிரியா: நுங்கம்பாக்கத்தில் எங்க வீட்லே சந்திக்கலாம்பா!

அனைவரும் ஆமோதித்து, ஆனியன் பகோடாவையும், மைசூர்பாகையும் ஆவலுடன் சாப்பிட்டு கிளம்பினர்.

நன்றி! வணக்கம்!!

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.


| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/6** செல்வி **A. சுவாதிலட்சுமி**<br>சுவாதி<br>மாயலுட<br>பூர்வீகம் : மயிலாடுதுறை | **25.2.2000**<br>165 cm | M.Com.,<br>DCFA<br>(IT WFH) | IT WFH | திரு. S. ராஜேந்திரன்,<br>44, சித்தி விநாயகர் நகர்,<br>செம்பனார்கோயில்,<br>தரங்கம்பாடி வட்டம் – **609 309.**<br>Cell : **94432 28227** |
| **B 2/6** செல்வி **A.N. Subhalakshmi**<br>Uthiradam 4th Patham<br>Kaarudai<br>பூர்வீகம் : Tirunelveli<br>விருப்பம் : Equally qualified / Good Job | **3.3.2000**<br>154 cm | B.Com.,<br>MBA.,<br>(Finance)<br>CA., (Final) | Indusind Bank Ltd.,<br>Chennai | திரு. A. Nellaiappan,<br>Tirunelveli Town - 627 006.<br>Cell : **94427 95996**<br>**75981 72996** |
| **B 3/6** செல்வி **ருக்ஷனா நடராஜன்**<br>சுவாதி<br>மேலக்கடம்பூர்<br>பூர்வீகம் : காருட | **03.04.99**<br>168 cm | B.E. (Comp. Science)<br>Now Studying<br>MS in USA | | திரு. S. கிருஷ்ணமூர்த்தி, BDO (Rtd.)<br>**3,** வியாசர் தெரு,<br>கிழக்கு தாம்பரம்,<br>சென்னை – **600 059**<br>Cell: **94436 90940** |
| **B 4/6** செல்வி **M. ஹரிணி**<br>உத்திரட்டாதி<br>விளந்துட<br>பூர்வீகம் : கொத்தங்குடி<br>விருப்பம் : இரண்டில் ராகு அல்லது கேது அமையப்பெற்ற வரன் | **28.11.98**<br>5' - 2" | B.E. (CSE) | Associate Consultant<br>Accenture, Bangalore<br>Rs. 18 Lakhs P/A | திரு. K. முரளி,<br>**52,** இந்திரா நகர், **6**வது தெரு,<br>மெடிக்கல் காலேஜ் ரோடு,<br>தஞ்சாவூர் – **613 007.**<br>Cell: **95973 22061, 94431 24261** |
| **B 5/6** செல்வி **A.S. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>ஆலந்துடா<br>பூர்வீகம் : அந்தனப்பேட்டை | **04.08.99**<br>161 cm | B.Arch., | Architect,<br>Casa Grand, Chennai<br>Rs. 4 Lakhs P/A | திரு. A. ஸ்ரீதர்,<br>D.No. F2, III Block,<br>No. 1/429, 4th Street, Karthikeyapuram,<br>Madipakkam, Chennai - 600 091.<br>Cell: **70105 99385, 98949 45741** |
| **B 6/6** செல்வி **கவுஸல்யா சங்கரநாராயணன்**<br>மிருகசீரிடம் 4ம் பாதம்<br>வஞ்சிரமுட<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : அமெரிக்காவில் H1Bயுடன் வேலை செய்யும் MS படித்த or Ph.D படிக்கும் வரன் | **30.04.98** | அமெரிக்காவில்<br>M.S., | | திரு. R. சங்கரநாராயணன்,<br>D4202, Mandarina Apt.,<br>7, Lock Street, Kotturpuram,<br>Chennai - 600 085.<br>Cell : **94451 46979** (Wi/fi Indian Number)<br>**968–95827225** |
| **B 7/6** செல்வி **இரா. ஜோதி**<br>மிருகசீரிடம் 3ம் பாதம்<br>காருட<br>பூர்வீகம் : குறிச்சி (சீர்காழி Tk.)<br>விருப்பம் : அரசு/வங்கி/ I.T துறையில் சென்னை, பெங்களூரில் பணிபுரியும் வரன். | **01.10.99**<br>165cm | B.A., MBA | | திரு. B. இராமலிங்கம்<br>79, விஸ்வநாதன் நகர்,<br>காட்டுமன்னார்கோவில் PO & Tk<br>கடலூர் மாவட்டம் – **608 301.**<br>Cell: **73394 08153, 87782 26003** |
| **B 8/6** செல்வி **S. Sivasangari**<br>Sadayam<br>Kothanuda<br>பூர்வீகம் : Kothatai<br>விருப்பம் : IT துறையில் பணிபுரியும் வரன். | **20.9.2002** | B.Tech (IT)<br>. | Associate Software Developer in Accenture<br>Chennai | திரு. T. Sivanesan,<br>No. 2, North Street,<br>Srimushnam,<br>Cuddalore District - 608 703.<br>Cell : **76676 66897** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/6** செல்வி **B. லெட்சுமி தேவி**<br>ஆயில்யம்<br>உத்திரகுட<br>பூர்வீகம் : வையூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன், சென்னையில் வேலையில் உள்ள வரன் | 10.5.2000<br>156cm | M.Sc.,<br>(Computer Science) | Zoho Corporation<br>Chennai<br>Rs. 5.76 Lakhs/PA | திரு. C. பாலசுப்பிரமணியன்,<br>வையூர் போஸ்ட்,<br>சிதம்பரம்<br>Cell: **96299 21869, 88709 12169** |
| **B 10/6** செல்வி **N. ஹரிணி**<br>பூசம்<br>பங்களதரிய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நிரந்தர பணி | 3.7.2000<br>177cm | B.E.<br>(EEE) | Software Engineer<br>HCL Tech, Chennai<br>Rs. 5.4 Lakhs / PA | திரு. V. நடராஜன்,<br>**91,** V.S.R. Nagar,<br>சிதம்பரம்,<br>Cell: **80150 98674, 98428 69953** |
| **B 11/6** செல்வி **R. பானுபிரியா**<br>கேட்டை 3ஆம் பாதம்<br>எரவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்) | 21.11.98<br>165cm | B.E.<br>(ECE) | Senior Software Engineer,<br>Freshworks,<br>Chennai | திரு. T. Ramesh,<br>11, SNR Flats,<br>Kodambakkam, Chennai - 600 024.<br>Cell: **94445 56972, 90801 87596** |
| **B 12/6** செல்வி **Dr. B. அபிநயா**<br>உத்திரட்டாதி<br>வங்காரமுட<br>பூர்வீகம் : விருத்தாசலம் (குமாரமங்கலம்)<br>விருப்பம் : மருத்துவர் / Engineer | 21.5.98<br>170cm | MBBS.,<br>Preparing for NEET PG Exam at Chennai | | திரு. Er. S. பாலசுப்ரமணியன்,<br>**154,** தொல்காப்பியர் தெரு,<br>பெரியார்நகர் தெற்கு,<br>விருத்தாசலம்,<br>கடலூர் மாவட்டம் – **606 001.**<br>Cell : **94432 91770** (Whatsapp)<br>**80729 93050** |
| **B 13/6** செல்வி **R. கீர்த்தியா**<br>அவிட்டம்<br>குருகுலராய<br>பூர்வீகம் : இலந்தைகூடம் | 1.6.2002<br>5' - 1" | B.E. (CSE) | Accenture,<br>Chennai<br>Software Engineer,<br>Rs. 5 Lakhs / PA | திரு. T. இரவிப்பிள்ளை,<br>**2/179,** இராஜவீதி,<br>இலந்தைக்கூடம் (அ),<br>திருமழப்பாடி (வழி)<br>அரியலூர் வட்டம் & மாவட்டம்<br>Cell : **94438 19454, 97868 85909** |
| **B 14/6** செல்வி **C. அனுப்பிரியா**<br>அவிட்டம்<br>தீத்தரிய<br>பூர்வீகம் : கருவாழக்கரை, மயிலாடுதுறை | 13.7.98<br>163 cm | B.E. (EEE) | Amishuhu Itech,<br>Solutions Pvt. Ltd.,<br>Sholinganallur,<br>Chennai | திரு. R. சந்திரசேகரன்,<br>**12**A, சேர்தங்குடி அக்ரஹாரம்,<br>பெரிய தெரு,<br>மயிலாடுதுறை<br>Cell : **87782 48421, 94424 19822** |
| **B 15/6** செல்வி **P. தேவதர்ஷினி**<br>விசாகம் 3ம் பாதம்<br>செஞ்சலுட<br>பூர்வீகம் : திருவிடைமருதூர் | 19.7.2002<br>175 cm | B.E. (ECE) | ZOHO Company,<br>Chennai | திரு. R. பொன்னரசன்,<br>90/A, தெற்கு வீதி, திருவிடைமருதூர்,<br>தஞ்சாவூர் மாவட்டம் – **612 104.**<br>Cell : **88380 01039,**<br>**94428 61136** (W) |



| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/6** செல்வன் **S. அருண்குமார்**<br>உத்திராடம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : திருவிசநல்லூர்<br>விருப்பம் : இணையான படிப்பு | **27.07.99**<br>5' - 6" | B.E.<br>(CSE) | Own Startup<br>Rs. 30,000 to<br>50,000 PM | திரு. R. சரவணன்,<br>1E, ஸ்ரீ மகாலிங்கம் நகர்,<br>திருவிடைமருதூர் – **612 104.**<br>Cell : **98947 51355, 73737 32315** |
| **G 2/6** செல்வன் **G. விஜய்**<br>பரணி<br>எருக்கலுட<br>பூர்வீகம் : திருவாவடுதுறை<br>விருப்பம் : நல்ல குணமுள்ள வரன் | **14.09.95**<br>180 cm | B.E.<br>(Mech.) | Business | திரு. G. கணேசன்<br>54, ராஜா தெரு, சுப்ரமணியபுரம்,<br>திருச்சி – **20.**<br>Cell : **75025 56085, 97883 77104** |
| **G 3/6** செல்வன் **P. Yagnanarayanan**<br>கேட்டை<br>அங்கனுட<br>பூர்வீகம் : திருநெல்வேலி<br>விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன் | **23.08.96**<br>173 cm | B.Tech<br>(ECE)<br>PGPM | Senior Consultant<br>Virtusa, Hyderabad<br>Rs.18.5 Lakhs/PA | Mrs. Kanthimathi Pushparaj,<br>D302, Majestic Shore,<br>208, Choolaimedu High Road,<br>Chennai - 600 094.<br>Cell : **97899 02105** |
| **G 4/6** செல்வன் **இரா. நித்தீஷ்குமார்**<br>கேட்டை<br>சேவுட<br>பூர்வீகம் : கொழையூர்<br>விருப்பம் : பணியில் உள்ள பெண் (சென்னை) | **21.08.99**<br>170 cm | B.E.,<br>(Mech.) | TCS (Software<br>Developer)<br>Chennai<br>Rs. 5 Lakhs / PA | திருமதி. S. ஜலஜா ராஜசேகர்,<br>**2/131**, கம்பர் நகர்,<br>சேத்திரபாலபுரம், மல்லியம் (அ),<br>குத்தாலம் (தா),<br>மயிலாடுதுறை (மா) – **609 806.**<br>Cell : **94882 20903, 91139 39976** |
| **G 5/6** செல்வன் **ர. ராஜா மணிகண்டன்**<br>திருவாதிரை<br>கொழுமுடையான்<br>பூர்வீகம் : காட்டுமன்னார்கோயில்<br>விருப்பம் : படித்த அழகான, வேலைக்கு செல்லும், சுத்த சைவ பெண் | **17.06.96**<br>165 cm | B.E,<br>(Mechanical<br>Engineering) | Manager - Private<br>Company, Chennai<br>Rs. 7.5 Lakhs/PA | Mrs. Revathi Ravichandran,<br>F2, Sri Andal's Lilly Apts.,<br>111, Priyadharshini Nagar,<br>TNHB Colony Road,<br>Sithalapakkam, Chennai - 600 126.<br>Cell : 94456 38756 |
| **G 6/6** செல்வன் **R. அரவிந்த்**<br>பரணி 2ம் பாதம்<br>பில்லாலுட<br>பூர்வீகம் : திருமாந்துறை | **03.07.94**<br>5' - 6" | M.Tech., | IT, Net Access<br>India Ltd.,<br>Chennnai<br>Rs. 13 Lakhs | திரு. R. ரமேஷ்,<br>நெ. **64**, காவேரி சதுக்கம்,<br>தந்தை பெரியார் நகர்,<br>விழுப்புரம் – **605 401.**<br>Cell : **94427 41245, 94890 12545** |
| **G 7/6** செல்வன் **தி. சிவசங்கர்**<br>சுவாதி<br>மாயலுட<br>பூர்வீகம் : மெய்யாத்தூர் | **20.03.95**<br>5' - 8" | B.E. (EEE)<br>D.C.M., | சிதம்பரம்<br>மார்கெட்டிங்<br>சொசைட்டி<br>சிதம்பரம் | திரு. R. திருவரசன்,<br>**121**, வ.உ.சி தெரு,<br>சிதம்பரம் – **608 001.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **94434 35688** |
| **G 8/6** செல்வன் **Rajesh .S**<br>திருவாதிரை<br>தென்னவராயன்<br>பூர்வீகம் : சின்ன சேலம் | **24.09.97**<br>6' - 5" | B.E. (EEE) | Electrical Engineer<br>Dyrocon Airtech<br>Pvt. Ltd.,<br>Rs. 30,000/- | திரு. Srinivasan .R,<br>No. 35, RMV Nagar,<br>Thiruvottiyur, Chennai - 600 019.<br>Cell : **73586 17885, 81228 80594** |
| **G 9/6** செல்வன் **V.S. கார்த்தி**<br>பூராடம்<br>வளர்தரிய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : சமபடிப்பு & சமவேலை | **5.11.97**<br>172 cm | B.Com.,<br>CA Inter<br>(Final) | Accounts Manager<br>தனியார் நிறுவனம்<br>சென்னை<br>Rs. 7.2 Lakhs/PA | திரு. மு. சுப்பிரமணியன்,<br>நெ. **46/4**, தாங்கல் உள்வாய் தெரு,<br>விருகம்பாக்கம், சென்னை–**600092.**<br>Cell : **94440 35903, 99530 00458**<br>(Both Whatsapp) |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 10/6** செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு | 30.01.96<br>180 cm | B.Tech.,<br>MBA., | Analyst -<br>Accenture, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ராமதாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், இலாசுப்பேட்டை,<br>புதுச்சேரி – 605 008.<br>Cell : 94425 80571, 86108 73478 |
| **G 11/6** செல்வன் **S. ராகுல்**<br>உத்திராடம்<br>கருவாழ<br>பூர்வீகம் : மேனாங்குடி<br>விருப்பம் : பெங்களூரில் பணிபுரியும் அல்லது பெங்களூருக்கு பணி மாறுதல் செய்ய விருப்பமுள்ள மணமகள் | 13.12.96<br>6' | B.Tech. | Senilr Software<br>Developer<br>Microsoft,<br>Bangalore | திரு. V. சதீஷ்,<br>மணப்பாக்கம்,<br>சென்னை – 600 125.<br>Cell : 99624 56470 |
| **G 12/6** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன். | 21.06.99<br>178 cm | B.Tech (ECE)<br>M.Tech (NIS) | Network Engineer,<br>(RAN) LMJ<br>Innovations, Amentum<br>Bengaluru | திரு. குமார் (எ) சிவசிதம்பரம்,<br>1, பங்களா தெரு, தேவனூர் சாலை,<br>வரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : 97873 10010, 94423 25468 |
| **G 13/6** செல்வன் **ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : ராகு, கேது உள்ளது / தகுதியான வரன் | 11.11.97<br>178 cm | B.E. (EEE) | Lead Test Engineer<br>QBurst Technologies<br>Chennai<br>Rs. 12,00,000/PA | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>20/2, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – 606 105.<br>Cell : 88705 55569 (Whatsapp)<br>98423 57920 |
| **G 14/6** செல்வன் **A. சாய் சரண்**<br>கார்த்திகை 3ம் பாதம்<br>பாலுட<br>பூர்வீகம் : சிதம்பரம் | 22.03.99<br>175 cm | B.E.<br>(E&I) | Operational Buyer,<br>NKT Operation<br>India Pvt. Ltd.,<br>Chennai | திரு. K. Aravindan,<br>153, I Main Road, Lakshmi Nagar Extn.,<br>Porur, Chennai – 600 116.<br>Cell : 94444 34710, 94448 34710 |
| **G 15/6** செல்வன் **B. செல்வகணபதி**<br>ஹஸ்தம்<br>உத்திரகுட<br>பூர்வீகம் : வையூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : ஏற்ற வரன் (Any Degree படித்த வரன்) | 28.05.96<br>174 cm | D.M.E. | Transport Manager<br>Business<br>Rs. 13.5 Lakhs/PA | திரு. C. பாலசுப்பிரமணியன்,<br>வையூர்<br>Cell : 96299 21869, 93846 84487,<br>88709 12169 |
| **G 16/6** செல்வன் **Gangadharan Sivakumar**<br>Kettai<br>Veludayan<br>பூர்வீகம் : Virudhachalam | 10.11.99<br>168 cm | B.Tech., | Tata Consultancy<br>Service, Chennai<br>Rs. 10 Lakhs/PA | திரு. V. Sivakumar,<br>Plot No. 50, Venba Avenue,<br>2nd Street, Sithalapakkam,<br>Chennai - 600 126.<br>Cell : 94445 08005, 94445 08001<br>E-mail : sivasivasiva199@gmail.com |
| **G 17/6** செல்வன் **மெ. சரவணகுமார்**<br>விசாகம் 1ம் பாதம்<br>வஞ்சனமுட<br>பூர்வீகம் : வேள்விமங்கலம் | 08.02.99<br>167 cm | B.E.<br>Mechanical | Solor Solutions Inc.<br>Bangalore<br>Rs. 3,00,000/PA | திரு. மெய்கண்டநாதன் பிள்ளை,<br>8/33, வடக்கு தெரு,<br>சிதம்பரம் நகர்,<br>செந்துறை – 621 714<br>Cell : 99408 37847, 99408 39080 |



# வணங்கி மகிழ்கிறோம்

## 20.06.2026 பிறந்தநாள் காணும்

திரு. S. **வெங்கடேசன் பிள்ளை** அவர்கள்

(தலைவர், சென்னை ராதா இன்ஜினியரிங் நிறுவனங்கள்)

திருமதி. V. **ஞானாம்பிகை வெங்கடேசன்**



கலியுக கர்ணன் ....
கார்குல வள்ளல் .....
கல்வி கடவுள் .....
எங்களை வாழ வைக்கும் வாழும் தெய்வத்திற்கு

## 20.06.2026 81வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

வாழ்த்தும் நெஞ்சங்கள்


காவனூர் **சி. தாண்டவமூர்த்தி - பூமதி**

மற்றும்

மகள் - மருமகன்
**M. அட்சயா முத்துகுமார்**
பேரன்கள்
**M. அவனிஷ்**
**M. கவிஷ்**

மகள் - மருமகன்
**A. ஐஸ்வர்யா அசோக்**
பேரன்
**A. வகீஷ்**

## கார்குல வள்ளல் S. வெங்கடேசன் பிள்ளை - திருமதி V. ஞானாம்பிகை



## கார்காத்த வேளாளர்களின் கலங்கரை விளக்கே!
## எட்டாவது கொடை வள்ளலே!!
## ஏழைகளின் இதய தெய்வமே!!!



ஆயிரம் பிறைகள் கண்ட தன்னிகரில்லா தலைவரே,
ஓய்வறியாமல் உழைக்கும்
எங்களின் சூரியனே!
உண்மை... உழைப்பு... உயர்வு...
என்ற இலக்கணத்தின் சான்றே!
நான்கு தசாப்தங்களின் சகாப்தமே!
“வாழ்நாள் சாதனையாளர்”
என்ற சொல்லின் அடையாளமே!
20.06.2026 அன்று
81வது பிறந்தநாள் காணும்
எங்கள் நிறுவனத்தின் தலைவரே,
தங்கள் திசை நோக்கி
தலைவணங்கி நிற்கிறோம்!
பூவிழுந்த நல்லூரின் மண்ணில்
எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து,
கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் உயர்ந்து,
உழைப்பையே மூலதனமாக்கி,
தனித்த முயற்சியால்
வெற்றியின் உச்சியை தொட்டவரே!
இன்று சர்வதேச அளவில்
பல சாதனைகள் படைத்து,
ஆயிரமாயிரம் குடும்பங்களின்
வாழ்வில் ஒளியேற்றி நிற்கும் பெருமகனே!
ஏழை எளிய மக்களுக்கு
சிறந்த கல்வி வழங்கி,
வீடுகள் கட்ட உதவி செய்து,
திருமண வாழ்வை அமைத்துக் கொடுத்து,
பலரின் மனதில்
நம்பிக்கை விதைக்கும் கருணை உள்ளமே!
தங்களின் நற்குணமும் சேவையும்
இன்னும் பல்லாண்டுகள் தொடர,
நல் ஆரோக்கியத்துடன்
சீரோடும் சிறப்போடும் வாழ,
எல்லாம் வல்ல இறைவனை
மனமார வேண்டுகிறோம்!
இனிய 81வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!
வாழ்க பல்லாண்டு
வளர்க தங்கள் புகழும் பணிகளும்
என்றென்றும் நன்றியுடன்

## சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் (பி) லிட்.,

**மேலாளர்கள்**

| | | | |
|---|---|---|---|
| S.ரவி – NCTPS | K.P.செந்தில்குமார் – உடன்குடி | M.சபாநாயகம் – ILFS | K.விநாயகம் – NCTPS |
| S.ஆடியபாதம் – JOCP | G.ஜெயவேல் – HO | K.S.மணிகண்டன் – NCTPS | G.A. மணிகண்டன் – ஒரகடம் |
| V.செந்தில்நாதன் – HO | T.விஸ்வநாத் – JOCP | D.ராதா – VVC | R.ராஜாராம் – RDSS |

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

**20.06.2026 அன்று பிறந்த நாள் காணும் கொடைவள்ளல், கலியுகக் கர்ணன், கார்குல வள்ளல், ஏழையின் பங்காளன், அகவை 81 காணும் சென்னை**

**இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் (பி) லிமிடெட்**

**தலைவர்**

# திரு. ச. வெங்கடேசன் பிள்ளை
# திருமதி. ஞானம்பிகை ஆச்சி



புகழ் உச்சியிலும் பணிவு குறையாமல்,
முயற்சியே மூலதனமென முன்னேறிய உத்தமர்,
ஆடம்பரம் தவிர்த்து, அன்பால் இணைந்தவர்,
உழைப்பின் மேன்மையை உலகிற்கு சொன்னவர், எங்களுக்கு
என்றென்றும் நீங்கள் கருணை தெய்வம்
வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு !!

திருமதி. **இராஜலெட்சுமி கலியபெருமாள்**, பூவை
திரு. **மாணிக்கம்**, திருமதி. **பத்மாவதி**, சென்னை,
செல்வன். **சஞ்சய் பாரதி**, செல்வி. **திவ்ய பாரதி**,
திரு. **பாபு**, திருமதி. **சுபாஷினி**, **சிதம்பரம்**, செல்வன். **தனவந்த் பாரதி**,
திரு. **ஜெகன்னாதன்**, திரு. **பூரணி**
திருமதி. **உஷா நாராயண சாமி**, கும்பகோணம்
திரு. **சண்முகநாதன்**, திருமதி. **சிவகாமி**, சென்னை
திரு. **ரவிந்தரன்**, திருமதி. **சசிகலா**, சென்னை
திரு. **லோகநாதன்**, திருமதி. **ஈஸ்வரி**, கடலூர்
திரு. **செல்வராஜ்**, திருமதி. **கீதா** சென்னை
செல்வன்.**ஞானபிரகாஷ் செல்வராஜ்**
திரு. **வசந்தகுமார்**, திருமதி. **மல்லிகா**
செல்வி. **R.நிவேதிகா**, செல்வி. **R.கௌதமி**
செல்வன். **L.தாமோதரன்**, செல்வி. **L.விதுளா**

## வெடிக்கிறது செல்போன்... சிதறுகிறது உறவுகள்!

பேசத் தெரியாத குழந்தையும் செல்போனை காதில் வைத்து 'போஸ்' கொடுக்கிறது.

ஸ்மார்ட்போனை விளையாட கொடுத்தால்தான் பள்ளிக் குழந்தைகள் வீட்டுப்பாடம் எழுதுகின்றன.

டீன்ஏஜ் பெண்களின் கைகளில் செல்போன் 'லைட்' மின்னி மின்னி மறைகின்றன.

குடும்ப பட்ஜெட்டில் செல்போன் ரீசார்ஜ் + இன்டர்நெட் பில் கணிசமான தொகையை விழுங்குகிறது.

இவையெல்லாம் நாம் ஸ்மார்ட்போன் அடிமைகளாக மாறிவிட்டதன் அடையாளங்கள்.

காலையில் எழுந்ததும் வாட்ஸ்அப்பில் வணக்கம் சொல்வதையும், இரவில் கண்கள் சொருகும்வரை செல்போனை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதையும் பலரும் வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள். இதில் சிறியவர், பெரியவர் என்ற பேதம் இல்லை. ஸ்மார்ட் போன்களை அதிகமாகப் பயன்படுத்துவதால் ஏராளமான பிரச்சினைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. குற்றங்கள் அதிகரிக்கின்றன. உறவுகள் பந்தாடப்படுகின்றன.

இது பற்றிய ஆய்வு முடிவுகள் ஒவ்வொன்றும் அதிர வைக்கின்றன.

87 சதவீதம் இளைஞர்கள் தங்கள் ஸ்மார்ட் போன்களை எப்போதும் கையில் வைத்திருப்பதாக ஒப்புக்கொள்கிறார்கள். 80 சதவீதம் பேர், 15 நிமிடங்களுக்கு ஒருமுறையாவது போனில் அழைப்பு மற்றும் மெசேஜ் வந்திருக்கிறதா? என சோதிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

12 சதவீதம் உறவு முறிவுகளுக்கு காரணம் செல்போன் தொடர்புகள்தான்.

27 முதல் 34 சதவீத விபத்துகளுக்கு முக்கிய காரணம் செல்போன்களே. விபத்து உருவாகும் சூழ்நிலைகளை அதிகப்படுத்துவதும் செல்போன் பயன்பாடுதான்.

80 சதவீத அமெரிக்கர்கள் போனை அருகில் வைத்துக்கொண்டுதான் தூங்குகிறார்கள். இவர்கள் விலை உயர்ந்த போன்களுக்கு அடிக்கடி மாறுவதை கவுரவமாக நினைக்கிறார்கள்.

**ஸ்மார்ட்போன் மயக்கத்தில் இருந்து விடுபட...**

* "வேறு வேலை பார்க்கும் போதாவது ஸ்மார்ட்போனை சுவிட்ச் ஆப் செய்யுங்கள். ஆன் செய்து, கைக்கு எட்டும் தூரத்தில் வைத்திருந்தால் கூட செல்போன் பூதம் உங்களை கவர்ந்து இழுத்து, உங்கள் வேலைக்கு இடைஞ்சலாகிவிடும்."

* சமைப்பது, படிப்பது, ஓவியம் தீட்டுவது, இசைப்பது, நடனம், பாட்டுப்பாடுவது போன்ற கலைகளில் ஈடுபட்டு, செல்போன் பயன்பாட்டு நேரத்தை குறையுங்கள்.

* விளையாட்டு, உடற்பயிற்சி, அரட்டையடித்தல் என போனை தாண்டிய விஷயங்களில் பொழுதைக் கழியுங்கள். நல்ல பொழுதுபோக்குகளுக்காக நேரம் ஒதுக்குங்கள்.

* மெயில் பார்த்தல், வலைதளங்களில் நண்பர்களுடன் உறவாடுதல் போன்றவற்றுக்கு குறைந்த அளவே நேரம் ஒதுக்குங்கள். மற்ற நேரங்களில் போனை தொடாதீர்கள்.

* பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற வலைத்தளங்களிலும், கேண்டிகிரஷ், டெம்பிள்ரன் போன்ற விளையாட்டுகளிலும் அடிமையாகி சிக்கித் தவிப்பவர்கள் கொஞ்சமும் வருத்தப்படாமல் இப்படி நேரம் குடிக்கும் அப்ளிகேஷன்களை 'அன்இன்ஸ்டால்' செய்துவிடலாம். இது உங்களுக்கு பல்வேறு விதங்களில் நன்மை பயக்கும்.

**அதிர்ச்சி தரும் பாதிப்புகள்**

ஸ்மார்ட்போன் பயன்பாடு மூலம் ஏற்படும் பாதிப்புகளுக்கு 'நோமோபோபியா' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

புரண்டு புரண்டு படுத்தாலும் தூக்கம் வராது. இந்த பாதிப்பின் பெயர் 'இன்சோம்னியா'.

திடீர் திடீரென்று கவலைகள் உருவாகி மனதை அழுத்தும். அந்த பாதிப்புக்கு 'டெக் அனாக்சிட்டி' என்று பெயர்.

விருப்பமானவரிடம் இருந்து போன் அல்லது மெசேஜ் வரவில்லையே என்பதிலிருந்து, அழைப்பு செய்தும் அவர் ஏற்கவில்லையே என்றும், என்னாச்சோ? என ஏங்குவது வரை, எண்ணற்ற கவலைகளை இந்த போன்கள் உருவாக்குகின்றன.

இந்தக் கவலைகளால் பல்வேறு உடல் மற்றும் மனநல பாதிப்புகள் உருவாகும்.

கண் எரிச்சல், கண் அழற்சி, கண் பொங்குதல் போன்ற தொந்தரவுகள் தோன்றும். மணிக்கட்டு மற்றும் தோள்பட்டையில் வலி உண்டாகும்.

அதிகமாக பேசுவதாலும், எழுத்து உரையாடல்களாலும் எண்ணங்கள் அலைமோதல் அதிகமாகும். மனஅமைதி குலையும். சகிப்புத்தன்மை குறையும். உறவு முறிவுகள் உருவாகும்.

வலைத்தளங்களில் ஏற்படும் கருத்துப் பகிர்வால் எதிர்பார்ப்புகளும், கருத்து மோதல்களும் கூடும். இதனால் மனஉளைச்சலும், மனக்கசப்பும் அதிகமாகும். நட்பு முறிவு – பகை உண்டாகும்.

பண்பு நலன்களில் மாற்றங்கள் ஏற்படும். தனிமை விரும்பிகளாகவும், தடம்புரண்ட பழக்கவழக்கங்களுக்கும் அடிமை ஆகலாம். குற்றச் செயல்களில் ஈடுபடும் எண்ணமும் தூண்டப்படலாம்.

அதிக பணமும், பொன்னான நேரமும் வீணாக கரையும். ஆதலின் அலைபேசியினுடனான உங்கள் நேரத்தினைத் தயவுசெய்து குறைத்துக் கொள்ளுங்கள்.

இது ஒரு அன்பான வேண்டுகோள்! தயவுசெய்து முயற்சியுங்கள்!!

– அர்ச்சனா சுவேதாரண்யம்
9943702054

உங்கள் இராசியான மயிலாடுதுறையில்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும்

# கார்குல மங்கல சந்திப்பு

மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் மங்கல சந்திப்பு நிகழ்வு **மயிலாடுதுறை , மகாதானத்தெரு, ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் 09.08.2026 ஞாயிற்றுக்கிழமை** காலை 9.00 மணியளவில் தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் இந்நிகழ்வினில் கலந்து கொண்டு பயன்பெறவேண்டுகிறோம். பதிவுக்கட்டணம் ரூ.600/-ஐ பதிவு விவரங்களுடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ **01.8.2026** க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பதிவுக்கட்டணத்தை கீழ்க்கண்ட முகவரிக்கு **M.O** மூலமாகவும் **G-pay** ( **9443507301-T.Panneerselvam** ) மூலமாகவும், அனுப்பிவைக்கலாம்.

தபால் / **M.O** அனுப்பவேண்டிய முகவரி
**T. பன்னீர்செல்வம்** (கம்பன் பிரிண்டர்ஸ்)
(மங்கல சந்திப்பு ஒருங்கிணைப்பாளர்)
32, பூக்கடைத்தெரு, மயிலாடுதுறை- 609 001.
Whatsapp No. 9443507301, Cell No. 6380141270

தபாலில் புத்தகம் பெற விரும்புவோர் ரூ.650/-ம் பதிவு இல்லாமல் தனிப்பிரதி வேண்டுவோர் ரூ.700/-ம் செலுத்த வேண்டும்.

குறிப்பு : விவரங்களை **kambankala@gmail.com** என்ற மின்னஞ்சலிலும் அனுப்பலாம். விண்ணப்பப் படிவத்தைத் தனித்தனி எழுத்துகளில் நிரப்ப வேண்டும். இணையதள முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

**T. ரவிகுமார்** தலைவர்,(பொறுப்பு)
**S. தில்லைநாயகம்** செயலாளர், **N. முத்துக்குமரசாமி** பொருளாளர்,
மற்றும் நகர சங்கப் பொறுப்பாளர்கள்.

| | |
|---|---|
| **பெயர்** | : |
| பிறந்த நாள் | : |
| நட்சத்திரம் | : |
| உயரம் | : |
| நிறம் | : |
| கோத்திரம் | : |
| படிப்பு | : |
| பணி விபரம் | : |
| | |
| | |
| ஊதியம் | : |
| தந்தை பெயர் | : |
| பணி விபரம் | : |
| பூர்வீகம் | : |
| தாயார் பெயர் | : |
| பணி விபரம் | : |
| பூர்வீகம் | : |
| தொடர்பு முகவரி | : |
| | |
| | |
| | |
| உடன் பிறப்பு | : ஆண் ☐ பெண் ☐ |
| திருமணம்ஆனவர் | : ஆண் ☐ பெண் ☐ |
| திருமணம்ஆகாதவர் | : ஆண் ☐ பெண் ☐ |
| விருப்பம் | : |
| இதர தகவல் | |
| | |
| தொலைபேசி | : |
| செல் | : |
| **E.mail** | : |

# கடந்து போகும்;
# எதுவும் கடந்து போகும்

மதிப்புறு முனைவர் கிருஷ்ணகுமாரி

'இதுவும் கடந்து போகும்' மிகச் சிக்கலான, துயரமான நேரங்களில் நம்மை மீண்டு வரச் செய்யும் ஒரு மந்திரம் இது. வாழ்க்கை ஒரு வட்டம்; இன்ப துன்பங்கள் மாறி மாறி வரும்; எதுவும் நிரந்தரம் இல்லை. நாம் சம்பாதித்த எதுவும் நமக்கு சொந்தம் இல்லாமல் போகும் நிலையும் வரும். அப்படி இருக்கும் போது நம் துன்பம், பிரச்னைகள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்? அதுவும் கடந்து போகும் எனும் நம்பிக்கையை நமது மனதில் விதைக்கும் மந்திரம் இது.

இறந்த தன் குழந்தையை மீட்டுத் தருமாறு கேட்ட ஒரு தாயிடம், புத்தர் பெருமான் இறப்பு எதுவும் நிகழாத ஒரு வீட்டில் இருந்து உப்பு வாங்கி வருமாறு கூற, அவளால் அப்படி ஒரு வீட்டைக் காண இயலாததால், உப்பு வாங்கி வர இயலவில்லை. அதன் மூலம் நிலையாமையைப் புரியவைத்த கதை அனைவரும் அறிந்ததே. ஆனால் உணர்ச்சிகள் நிறைந்த மனிதர்கள் நாம்! நிதர்சனத்தை ஏற்க நமது மனம் மறுக்கும்; துன்பம் என்றால் விரக்தியின் உச்சிக்கு சென்று, விபரீத முடிவுகளை எடுக்க துணியும் மனம், அதைத் தீர்க்கவோ அல்லது அந்நிலை மாறிவிடும் என்றோ எண்ணாது. பள்ளி மாணவர்களின் தேர்வு தோல்வியும், இளவயதினரின் காதல் தோல்விகளும் நம்மை தவறான முடிவெடுக்க தூண்டும். அப்படியொரு முடிவு எடுக்காமல் நாம் ஒரு நிமிடம் யோசித்தால் நிச்சயம் தீர்வு கிடைக்கும்.

ஆன்மீகமாக பார்த்தாலும் கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், கருப்பை உயிருக்கும் வாழ வழி செய்த இறைவன் இதனையும், எதனையும் தீர்ப்பான் என நம்பலாம்; நம்ப வேண்டும். பிரச்னையில் மூழ்கி கரைந்து விடாமல் சற்று தள்ளி நின்று வழி காண முயலலாம்; தீர்வும் கிடைக்கும். அதைக் கடந்து போக மன உறுதியும் கிடைக்கும். இதுவும் கடந்து போகும் என்பதை ஏற்றுக் கொண்டாலும், எப்படி வெளி வருவது, எதுவும் மறந்து போகாதே; மனதில் வடுவாக நின்று உறுத்துமே என்று நீங்கள் சொல்வது ஏன் மனதிலும் ஒலிக்கிறது. ஆனால் பொதுவாக மறதி என்பது நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறதே!

நேற்று என்ன சாப்பிட்டோம் என்பது கூட நினைவில் நிற்கவில்லை என புலம்பும் நாம், எத்தனையோ வருடங்களுக்கு முன் நம் உறவுக்காரர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்த சிறு தவறுகளை மறவாமல் நினைவு வைத்து, பகை பாராட்ட மறப்பதில்லை, அது சரியா? சிறிதே யோசியுங்கள்! இதுவும் கடந்து போகும் என்று நினைத்து மறந்து விட்டு மேலே போகாமல் கோபம், வன்மம், வெறுப்பு இவற்றை தேவை இல்லாமல் சுமந்து கொண்டு, நமது நிம்மதியை இழந்து வாடுகிறோம். நிம்மதியாக வாழ வேண்டிய நம் வாழ்க்கையை மனச்சுமையுடன் கழிப்பது நல்லதா? நினத்துப் பார்க்க வேண்டும்.

நாம் வாழும் காலம் கொஞ்சமே. அதில் நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் ஆயிரம் இருக்கும். நாம் அடைய வேண்டிய இலக்குகள் எதிரே காத்து சொண்டிருக்கின்றன. அதில் நம் கவனத்தைத் திருப்புவோம். வாழ்வின் மகத்துவம் புரிந்து ளெள்வோம், எந்த அவமானமும் விழுங்க முடியாதது இல்லை, அதில் நம்மை தொலைத்தால், காணாமல் போவது நமது நிம்மதியே என்பதை உணருவோம். அதற்கான தாரக மந்திரம் தான் 'இதுவும் கடந்து போகும்'. 'Let it go, Let it go' என்று ஒரு ஆங்கில பாடல் வரிகள் உண்டு. இதுவும் கடந்து போகும் என்ற வாசகத்தைக் கூறியவர் ஒரு பாரசீக சூஃபி கவிஞர். அதுவே தற்போது பொன்மொழியாக மாறி உள்ளது. துன்பம் வரும் காலங்களில் மட்டுமல்ல; இன்பம் வரும் காலங்களிலும் இப்பொன்மொழி நினைவில் இருக்க வேண்டும். எங்கும் மிகாமை வேண்டும். அப்படி இருப்பின் வெற்றியில் மமதையும், தோல்வியில் சோர்வும் நமக்கு உண்டாகாது. நல்ல மனிதர்கள் நண்பர்களாவர்; தீயவர்களைக் கண்டு நாமாகவே தூர விலகுவோம்.

'வாழ நினைத்தால் வாழலாம்; வழியா இல்லை பூமியில்' என்ற கவிஞரின் வரிகளை மனதில் நிறுத்தி, மகிழ்ச்சியோடு வாழ்வோம்!

---

## வருந்துகிறோம்

சீர்காழி, கன்னியாகுடி கிராமம் திரு. G. திருவரசுபிள்ளை அவர்கள் 28.4.26 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சீர்காழி, தியாகராஜ நகர் சங்க உறுப்பினர் ரவிச்சந்திரன் அவர்களின் தாயார் வசந்தா அம்மையார் 18.5.26 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

– S. ரவிச்சந்திரன் பிள்ளை, செயலாளர்

## காக்க... காக்க... காலம் காக்க...

Dr. D. Kalyanakumar, Trichy - 18

பொதுவாக குறித்த இடத்திற்கு குறித்த நேரத்திற்கு வரும் மனிதர்களை பாராட்ட வேண்டியதில்லை. அதுதான் இயல்பாக இருக்க வேண்டிய பண்பு. ஆனால் இப்போதெல்லாம் பாராட்டும் போதே இவர் குறித்த நேரத்திற்கு வரும் பழக்கம் கொண்டவர் என்றும் கூட சேர்த்து பாராட்டுவதை நேரடியாகவே காண முடிகிறது. நேர தவறுதல் ஏன் ஏற்படுகிறது? அக்கறையின்மையால் உலகில் அதிகம் ஒலிக்கும் ஒரு சொல் "நேரமில்லை". எல்லோருக்கும் 24 மணி நேரம்தான் என்ற போதும், பலருக்கு ஏனோ, அவர்களின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் கூட நேரமில்லாது போகின்றது. என்னப்பா, நல்லா இருக்கியா? என்று கேட்டால் 'நேரம் சரியில்லை' என்று கோள்களை குறை சொல்லும் மனப்பான்மையை இன்றைய சமூகத்திடம் அதிகம் காண்கின்றோம். வீடுகளில் நடக்கும் பிரச்சனைகளுக்குக்கூட கோள்களின் மீது பழியைப் போட்டு, மனித மனவிகாரங்களை களையப்பார்க்கும் அற்ப சாக்குகளை அறிகின்றோம்.

பலரின் அளப்பரிய ஆற்றல்கள், நாள், நேரம், காலம் போன்ற போலிக் கணக்குகளால் அவர்களின் உள்ளேயே உருக்குலைந்து போவதையும் பார்க்க முடிகின்றது. நேரம் தவறாமை என்பதை வாழ்நாள் முழுவதும் கறாராக கடைபிடித்தவர் காந்தி யாருக்காகவும் எதற்காகவும் காத்திருக்காத ஒரே விஷயம் எதுவென்றால் அது நேரம்தான். குறித்த நேரத்தில் செய்யப்படும் எந்த ஒரு விஷயமும் வெற்றியைத் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனால்தான் முன்னோர்கள், 'காலத்தே பயிர் செய்' என்று கூறிச்சென்றனர். இங்கு பயிர் என்பது விளையும் பயிர் அல்ல. அது நாம் செய்யும் காரியம் என்று பொருள் கொள்ள வேண்டும். மாவீரன் நெப்போலியனின் மாபெரும் வெற்றிக்கும் நேரம் தவறாமையும் ஒரு முக்கிய காரணமாகும். 'பத்து நிமிடம் லேட்டா போனா ஒண்ணும் குடிமுழுகிடாது என்பதுதானே பலருடைய மனநிலை? 'பங்சுவாலிடி' என்பது ஏதோ அலுவலக வேலைக்கு மட்டுமானதல்ல. குடும்பத்திலும் சமூகத்திலும் தினம் தினம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு செயல் தான்.

யாரிடமும்வாங்கமுடியாத,யாருக்கும்கொடுக்க முடியாத ஓர் உன்னத பொருள் 'நேரம்' உங்கள் கடிகாரத்தைக் கொஞ்ச நேரம் உற்றுப் பாருங்கள். எவ்வளவு நேர்த்தியாக வினாடிகள், நிமிடங்கள், மணிகள் என ஓடிக்கொண்டே இருக்கிறது. காலையில் வேகமாகவும், மதியம் சோர்வாகவும், மாலையில் தூங்கியபடியும் அது ஓடுவதில்லை. ஆனால் நாமோ நம்முடைய மனநிலைக்கு ஏற்ப, 'டைம் செம பாஸ்டா ஓடிடுச்சு', 'நேரம் போதவே மாட்டேங்குது' என காலத்தைக் குறை சொல்கிறோம். குறை கூறுவதை விடுத்து நம் செயல்களைச் செவ்வனே செய்து முடிப்போம்!

## ஒப்புரவு மாத இதழுக்கு மனமகிழ் சான்று

| | | | |
|---|---|---|---|
| கார்காத்தார் | இன | மாத | இதழாய் |
| ஒப்புரவு | கண்டேன் | உள்ளம் | குளிர்ந்தேன் |
| தித்திக்கும் | தேனாய் | தெவிட்டா | இன்பமாய் |
| நல்லன | எழுதி | நலிந்தன | தள்ளி |
| சிறியவர் | முதல் | பெரியவர் | வரை |
| அறிவுரை | கூறி | ஆலோசனை | வழங்கி |
| மங்கல | சந்திப்பு | மகிழ்வாய் | நடத்தி |
| ஒப்புரவு | இருக்க | பயமேன் | என்று |
| கைபேசி | வழியே | திருமணம் | முடித்து |
| பள்ளி | கல்லூரி | படிக்கும் | மாணாக்கர் |
| உதவித் | தொகை | உரிமையாய் | கொடுத்து |
| அனைவர் | மனதிலும் | ஆழமாய் | பதிந்து |
| நன்மைபல | செய்யும் | மாத | இதழே |
| கார்காத்தார் | இனம் | உள்ள | வரை |
| தொடரட்டும் | உன்பணி | ஓங்கட்டும் | உன்சேவை! |

மாணிக்க. வசந்தா
மயிலாடுதுறை

## ஓர் அறிவிப்பு

## இளம் எழுத்தாளர்களை உருவாக்கும் திட்டம்

**உங்களுக்குகோர் வேண்டுகோள்.**

உங்கள் அப்பா அல்லது அம்மாவின் கிராமம் குறித்து ஒரு கட்டுரை, கார்காத்தார் ஒப்புரவு இதழில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஒரு பக்கத்துக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். இது போட்டி அல்ல; ஆனால் உங்கள் கட்டுரைகள் வரும் மாதங்களில் பிரசுரிக்கப்படும். இன்றைய இளைய தலைமுறைக்கு நமது கிராமங்கள் குறித்து தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அனைவரின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். கட்டுரைகள் அனுப்ப வேண்டிய கடைசி தேதி 30.06.2026.

ஆசிரியர் குழு

அனுப்ப வேண்டிய முகவரி

**கார்காத்தார் ஒப்புரவு**
எண். 64, சௌராஷ்டரா நகர்
10 வது தெரு, சூளைமேடு,
சென்னை – 600 094.



# சிறுவர் பகுதி




தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com


மற்றவர்கள் கெட்டவர்கள் என்று சொல்வதன் மூலம் நாம் நல்லவர்களாகிவிட முடியாது

**புதிய புத்தகங்கள்! புதியஉடை! புதிய நண்பர்கள்! புதிய ஆசிரியர்கள்!**

தேர்வு முடிந்து புதுக் கல்வியாண்டு துவங்குகிறது. எல்லாமே புதிது! புதிய புத்தகங்கள்! புதியஉடை! புதிய நண்பர்கள்! புதிய ஆசிரியர்கள்! சிலருக்கு பள்ளிக்கூடமே புதிதாக இருக்கும்! மலை வாழையல்லவோ கல்வி! மலை வாழைக்கு நிகரான கல்வியை பயிலும் நீங்கள் உங்கள் பள்ளி, ஆசிரியர்கள், நண்பர்கள், புத்தகங்கள் எல்லாவற்றையும் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுங்கள். விருப்பத்தோடு நம்பிக்கையோடு, மகிழ்வோடு கல்வி பயிலுங்கள். வகுப்பறை களில், கூட்டங்களில் முன்வரிசையில் அமர்வதை வழக்கமாகக் கொள்ளுங்கள். கூச்சப் படாதீர்கள். வகுப்பறைகளில், கூட்டங்களில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பேசுங்கள். பேசாவிடில் நீங்கள் தன்னம்பிக்கையை இழக்க வாய்ப்பாக அமைந்துவிடும். தெரியாத விஷயங்களைத் தெரிந்ததுபோல பாசாங்கு செய்யாதீர்கள். தெரியவில்லை என உடன் மொழிவதே தன்னம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு. இது முடியாது, நடக்காது போன்ற எதிர்மறை எண்ணங்களை மூட்டைகட்டி வையுங்கள். தாழ்வு மனப்பான்மையைத் தவிர்த்து எப்போதும் முடியும் என்ற உறுதியுடன் ஆர்வத்துடன் சிரித்த முகத்துடன் உள்ளன்போடு கல்வியாண்டுப் பணியைத் துவக்குங்கள். மேலும் மேலும் வெற்றி அடையுங்கள்!

**உடல் நலத்திற்கு சில டிப்ஸ்!**

**1. ஐஸ்வாட்டருக்கு நோ சொல்லுங்கள்!!!**

ரொம்ப தாகம் எடுக்கிறது என்பதால் சிலர் ஐஸ்வாட்டரைக் குடிப்பாங்க. ஆனா, ஐஸ் வாட்டர் உண்மையிலேயே தாகத்தை அடக்காது. உடல் சூட்டைதான் அதிகரிக்கும்.

நிறைய தாகம் எடுக்கும்போது கொஞ்சம் வெதுவெதுப்பான சுடுதண்ணீரை குடிச்சுப்பாருங்க தாகம் டக்குன்னு அடங்கிடும்.

அதுமாதிரியே ,சாப்பிடும்போது ஐஸ்வாட்டர் குடிக்கக்கூடாது. காரணம் ஐஸ்:வாட்டர் நம் உமிழ் நீர் சுரப்பதைத் தடுத்து செரிமானத்தைக் குறைத்துவிடும். நாம் நெய், எண்ணை பதார்த்தங்களை சாப்பிடும்போது அதில் உள்ள கொழுப்பு செரிமாணம் ஆகாது புற்றுநோய் தோற்றுவிக்கும் வாய்ப்புள்ளது என ஆய்வுவழி அறியப்பட்டுள்ளது.

**2. நிறைய தண்ணீர் குடிங்க!**

வாய் துர்நாற்றத்துக்கு முக்கிய காரணம் வாய் உலர்ந்து போறதுதான். நிறைய தண்ணீர் குடிச்சாத்தான் உமிழ் நீர் அதிகமாக சுரக்கும்.

எது சாப்பிட்டாலும் வாயில் தண்ணீர் ஊற்றி நன்றாக கொப்பளிங்க. பல் இடுக்குல மாட்டிக்கிற உணவுத்துகள்கள்தான் வாய் துர்நாற்றத்திற்கு முக்கிய காரணமாகிறது.

பேஸ்ட்டோட கொஞ்சம் உப்பு, எலுமிச்சை சாறு சேர்த்து பல் தேச்சீங்கன்னா உங்கள் பற்கள் வெண்மையாக மின்னும்.

**கணிதப் புதிர்**

ஒரு காட்டுப்பாதையில் 12 பேர் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களிடம் 5 நாட்களுக்குப் போதுமான உணவுதான் இருந்தது. மறுநாள் மற்றொரு கோஷ்டி இவர்களுடன் சேர்ந்து கொண்டது. அவர்களிடம் இருந்த உணவு ஏற்கனவே தீர்ந்து போயிருந்தது. இருப்பதை எல்லோரும் பகிர்ந்து கொள்வதென்றால் உணவு 3 நாட்களுக்குத் தான் வரும் என்று கணக்குப்போட்டார்கள். அப்படியானால் வந்து சேர்ந்த இரண்டாவது கோஷ்டியில் இருந்தவர் எத்தனை பேர்?



**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு..**

முயன்றுதோண்டத்தோண்ட மணலில் பெருகும் நீரூற்றுப்போன்று ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கற்கக் கற்க அறிவு மேம்படும் (வாழ்நாள் முழுவதும் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கற்றுக்கொண்டே இருந்தாலும் கல்வியில் ஒரு முடிவான நிலையை எட்ட முடியாது)



## விடுகதைகள்

1. துடிப்பான் துவளமாட்டான்.அவன் யார் ?
2. தொட்டால் சுருங்கிக்கு தொண்ணூறு கால்கள்.அது என்ன ?
3. பல்லைப்பிடித்து அழுத்தினால் பதறி பதறி அழுவான் .அவன் யார் ?
4. அந்தாப்போகுது ,இந்தாப்போகுது. அடியைப்பார்த்தால் தெரியவில்லை. அது என்ன ?
5. நீரில்லாக்குளத்தில் நீண்ட கொடி ஒன்று. வாடாது. வதங்காது, பூக்காது, காய்க்காது. அது என்ன ?
6. ஊசிபோட்டவர் ஊமைபோல் போகிறார். யார் ?
7. உச்சியில் ஓடின தங்கக் கம்பி , உருட்டவும் முடியாது.சுருட்டவும் முடியாது. அது என்ன ?
8. உதைகொடுத்தால் உருமிவிட்டு ஓடுவான். யார் ?
9. உயரப்பறந்தாலும் ஊன்றுகோலின்றி நிற்காது. எது ?
10. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து ,வட்டக்குடை பிடித்து வருகிறார் துரை மகனார்.அவர் யார் ?

## பொது அறிவு வினா விடை

1. தமிழகத்தில் மூலிகைகள் அதிகம் விளையும் இடம் எது ?
2. இசைக்கலை, நாட்டியக் கலை அகியனவற்றின் வரலாற்றைக் கூறும் தமிழ்க் காப்பியம் எது ?
3. தமிழ் நாட்டில் அனல் மின் நிலையம் அமைந்துள்ள இடம் எது ?
4. அண்மையில் கடலுக்குள் அழிந்துபோன தமிழக நகரம் எது ?
5. கப்பலோட்டியத் தமிழர் என்று அழைக்கப்படுபவர் யார் ?
6. புரட்சிக்கவி என்று அழைக்கப்பட்டவர் யார் ?
7. பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்படுபவர் யார் ?
8. அன்னை தெரசா பல்கலைக்கழகம் எங்கு அமைந்துள்ளது ?
9. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் யார் ?
10. தமிழில் வெளியான முப்பரிமான (3டி)திரைப்படம் எது ?
11. தமிழ் நாட்டில் கோழிப்பண்ணைக்குப்புகழ் பெற்ற ஊர் எது ?
12. பாஞ்சாலி சபதம் என்னும் நூலை இயற்றியவர் யார் ?
13. தமிழ் நாட்டில் மதுவிலக்கை முதன்முதலில் கொண்டுவந்தவர் யார் ?




## ஜோக்ஸ்

1. பத்திரிக்கை ஆசிரியரா இருந்தவருக்கு பள்ளிக்கூட ஆசிரியர் வேலைகொடுத்தது தப்பா போச்சு! எப்படி சொல்றீங்க ?
   மாணவர்களோட பரிட்சை ரிசல்டை குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்கணும்னு பிடிவாதம் பண்றாரு.
2. நீங்க எழுதின ஜோக் பத்திரிக்கையில பிரசுரம் ஆகியிருக்கே ....அப்புறம் என்ன கவலையா இருக்கீங்க ?
   அந்த ஜோக்கை பிரசுரம் பண்ணினதுக்கு சன்மானம் அனுப்பச் சொல்லி லெட்டர் எழுதியிருக்காங்க!
3. டாக்டர்! நீங்க இந்தக் கிளினிக்கை ஆரம்பிச்சதிலிருந்து இது வரைக்கும் நான் உங்களைத் தவிர,வேற எந்த டாக்டர்கிட்டேயும் போனதில்லை!
   நானும் அப்படித்தான் .இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதிலிருந்து இது வரைக்கும் உங்களைத் தவிர,வேறு எந்த பேஷண்ட்டுக்கும் நான் ட்ரீட்மெண்ட் கொடுத்ததிலலை .
4. உங்க ஃபைனான்ஸ் கம்பெனிக்கு நியூயார்க் ,லண்டன்,மாஸ்கோ,டோக்கியோ ஆகிய நகரங்களில் எல்லாம் கிளைகள் இருக்கிறதா போலீஸ்கிட்ட ஏன் பொய் சொன்னீங்க ?
   அந்த நகரங்களை எல்லாம் சுத்தி பார்க்கணுங்கற ஒரு நப்பாசையில்தான்!

## சிந்திக்க சில வரிகள்

1. கோபத்தால் சாதிப்பதைவிட பொறுமையால் ,அன்பால் அதிகம் சாதிக்கலாம்.தீராத கோபம் யாருக்கு லாபம் ?
2. வாழ்க்கை ஒரு பூந்தோட்டம்.அதில் மலர்வதும் வீழ்வதும் சகஜம். இழப்பு நம்மோடு.வாசனை பிறரோடு.

உண்மையான பணக்காரன்: தேவைகள் நிறைவடைந்ததாக சரித்திரம் இல்லை. தேவைகளை நாம்தான் நிறைவு செய்ய வேண்டும். பலகோடி ரூபாய்க்கு அதிபதியாக வாழ்கிறவன் பணக்காரன் இல்லை. ஆசை என்கிற தனது யானைக்கு அங்குசத்தை மாட்டிவிட்டு நிம்மதியாக வாழ்கிறவன்தான் உண்மையான பணக்காரன்.

**வாழ்க்கைக்குத் தேவையான செய்திகள்**

பிறர் உங்களைத் தாழ்த்திப் பேசும்போது செவிடாகவும், புகழ்ந்து பேசும்போது ஊமையாகவும் இருந்தால் உங்களை யாராலும் தோற்கடிக்க முடியாது.

சோம்பல் : சோம்பலுக்கு ஒருநாள் இடம் கொடுத்தால் அது மறுநாளையும் திருடிக்கொள்ளும்.

ஏமாற்றம் : ஏமாற்றங்களை பழகிக்கொள்ளுங்கள்.ஏனென்றால் வாழ்க்கை உங்களுக்கு அதை மட்டுமே ..... இலவச இணைப்பாக கொடுக்கத் தயாராக இருக்கிறது.

அற்புதங்கள் : அற்புதங்கள் நிகழக் காத்திருக்காதீர்கள்.வாழக்கையே மிகப்பெரிய அற்புதம்தான்.

புத்திசாலித்தனம் : எதிர்த்து சண்டையிடுவதற்கு அதிக புத்திசாலித்தனம் தேவையில்லை .புரிந்துகொண்டு விட்டுக்கொடுப்பதற்குதான் அதிக புத்திசாலித்தனம் தேவைப்படுகிறது.

பெற்றோர்கள் : நீ என்ன செய்யப்போகிறாய் ? என்பதை அம்மாவிடம் சொல்.....
எப்படிச் செய்யவேண்டும் ? என்பதை அப்பாவிடம் கேள்....நம் வாழ்வின் சிறந்த வழிகாட்டி நம் பெற்றோர்களே!

– தஞ்சை மோகன் குமார்

---

**கொடுக்கப்பட்டுள்ள பாடல் வரிகளை எழுதியவர்களின் பெயர்களோடு இணையுங்கள்**

1. கற்க கசடற கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக
2. அறம் செய விரும்பு
   ஆறுவது சினம்
3. பாதகம் செய்வோரைக் கண்டால்
   நீ பயங்கொள்ளலாகாது பாப்பா
   மோதி மிதித்து விடு பாப்பா
4. மலை வாழை அல்லவோ கல்வி
   நீ வாயார உண்பாய் புதல்வி
5. அச்சம் என்பது மடமையடா
   அஞ்சாமை திராவிடர் உடைமையடா
6. வாடிய பயிரைக் கண்டபோ
   தெல்லாம் வாடினேன்.

அ. பாரதிதாசன், ஆ. வள்ளலார், இ. திருவள்ளுவர்,
ஈ. கண்ணதாசன், உ. ஔவையார், ஊ. பாரதியார்.



---

**பள்ளிச் செல்லுதல்**

பயனில்லை
ஓர் எட்டில் ( 8ல்) வளர்க்காத பிள்ளையும்
ஈரெட்டில் (16ல் ) கற்காத கல்வியும்
மூவெட்டில் (24ல்) முடியாத திருமணமும்
நாலெட்டில் (32ல்) பெறாத பிள்ளையும்
ஐயெட்டில் (40ல்) சேர்க்காத செல்வமும்
ஆறெட்டில் (48ல்) தேடாத புகழும்
ஏழெட்டில் (56ல்) சுற்றாத தேசமும்
எட்டெட்டில் (64ல்) கிடைக்காத ஓய்வும்
பயனில்லை



கடந்த காலம் நிகழ் காலம் வரும் காலம்

**பொன்மொழிகள்**

உன் நண்பன் வெற்றி பெறும்போது அவன் என் நண்பன் என்று கூறி பெருமை கொள்.
உன் நண்பன் தோல்வியடையும்போது நான் உன் நண்பன் என்று கூறி அருகில் நில்
நேற்று என்பது பழைய பேப்பர் இன்று என்பது நியூஸ் பேப்பர் நாளை என்பது கொஸ்டின் பேப்பர்
வாழ்க்கை என்பது ஆன்சர் பேப்பர் கவனமாக எழுதுங்கள்.......


## இவை தெரியுமா?

### திறமையான எஞ்ஜினியர்கள்


ஆம்! கரையான்கள்தான்.டைனோசார் காலத்திலிருந்தே இந்த பூமியில் வாழந்துவரும் பூச்சியினங்கள். கரையான்கள் மரக்கட்டைகள்,பட்டுப்போனமரங்கள்,காகிதம்,புத்தகம்,துணி ஆகியவற்றை உண்டு உயிர் வாழ்கின்றன. காலனிகளாக வாழும் இவற்றின் குடியிருப் பினைத்தான் கரையான் புற்று என்கிறோம்.இப்புற்று மண்,மரத்தூள் மற்றும் கரையான் எச்சில் இவற்றால் அமைக்கப்படுகிறது.

இறக்கைகள் உள்ள பறக்கும் கரையான்களுக்கு மட்டுமே பார்க்கும் திறன் உண்டு.இவைதான் வளர்ந்து ராணி கரையான்களாகவும், ராஜாகரையான் களாகவும் ஆகின்றன.ராஜா கரையானும், ராணிக்கரையானும் 30ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.வேலைக்காரக் கரையானும் படைவீரக்கரையானும் சில ஆண்டுகள்தான் வாழ்கின்றன.


ராணி கரையான்


படைவீரக் கரையான்


வேலைக்கார கரையான்


கரையான் புற்று

கரையான் இவற்றில் ராணி கரையானுக்கு முட்டையிடுவது மட்டுமே வேலை. வேலைக்கார கரையான் புற்றினை அமைக்கிறது. படைவீரக் கரையான் பாதுகாப்பளிக்கின்றது. ராணி கரையான்கள் அளவில் மிகப்பெரியவை. முட்டையிடும் காலத்தில் அவை நம் கைவிரல் அளவிற்கு பருமன் அடைகின்றன. முட்டைகள் அனைத்தும் பார்ப்பதற்கு ஒன்றுபோலவே இருக்கும். அதிலிருந்து வெளிவரும் இளம் கரையான்களும் ஒரே மாதிரியே உள்ளன. வளர்ந்து பெரிதாகும்போதுதான் அவை ராஜாவாகவோ, ராணியாகவோ வேலைக் காரராக படைவீராக வளர்ச்சி அடைகின்றன.தராசின் ஒருதட்டில் உலகில் உள்ள மொத்த கரையான்களையும் வைத்து ,மறு தட்டில் உலகில் உள்ள மொத்த மனிதர்களையும் வைத்தால் எது அதிக எடை இருக்கும் என்று பார்த்தால் கரையான்கள்தான்!

### தமிழ்பாடலைச் சொல்லி அசத்தியவர்!

ஒரு முறை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர்.ராதாகிருஷ்ணன் முதல் தடவையாக ஐ.நா .சபையில் ஒரு தமிழ்பாடலைச்சொல்லி அதற்கு,இலத்தீன்மொழிப் பெயர்ப்பையும் சொன்னாராம். அதனைக் கேட்ட பலநாட்டுத் தலைவர்களும் அசந்து போனார்கள்.கூட்டம் முடிந்ததும் அந்தப்பாட்டை அவரிடம் எழுதி வாங்கிக் கொண்டார்கள்.அந்தப்பாடல் யாதும் ஊரே ...யாவரும் கேளீர் என்பதுதான்.

### வெற்றிக்கு அடிப்படை தோல்வி

எப்படி என்கிறீர்களா? வில்லியம் ஹாக்கின்ஸ் என்பவர் சாதராரண சேல்ஸ் மேனாகத்தான் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.பெரிய தொழிலதிபராக ஆனார். அவரிடம் ஒரு நிருபர் கேட்டார். சேல்ஸ்மென்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன ?

நாம் விற்கும் பொருள்களின் அனைத்து விபரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். சளைக்காமல் முயற்சி செய்துகொண்டே இருக்கவேண்டும். வேண்டாம் என்று வாடிக்கையாளர் மறுத்தாலும் அவரைத்தொடர்ந்து சந்தித்து வரவேண்டும். நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும்.அவருடன் எந்த விளையாட்டு விளையாடினாலும் நாம் வேண்டுமென்றே தோற்கவேண்டும்.இந்த யுக்தி மிக முக்கியம்.

**கணிதப் புதிர் விடை:** நான்கு பேர்கள்

### விடுகதை விடைகள்

1.கண் இமை 2.மரவட்டை 3.ஹார்மோனியம் 4.எறும்பு 5.கை ரேகை 6.தேள்
7.மின்னல் 8.ஸ்கூட்டர் 9.கொடி 10.நண்டு

### பொது அறிவு வினா விடைகள்:

1.கொல்லி மலை 2.சிலப்பதிகாரம் 3.நெய்வேலி 4.தனுஷ்கோடி 5.வ.உ.சிதம்பரனார்
6.பாரதி தாசன் 7.கா. அப்பாத்துரை 8.கொடைக்கானல் 9.முத்து லெட்சுமி அம்மையார்
10.மைடியர்குட்டிச்சாத்தான் 11.நாமக்கல் 12.மகா கவி சுப்ரமணிய பாரதியார் 13.ராஜாஜி

# CREW PUBLIC CHARITABLE TRUST

40, சப்தகிரி காலனி, சென்னை–83.

## சங்க நிர்வாகிகளுக்கு அன்பான வேண்டுகோள்.

வரும் 2026–2027 ஆம் கல்வி ஆண்டிற்கு, கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், பாலிடெக்னிக், I.T.I. படிக்கும் ஏழ்மையான மாணவ மாணவியர்களை மட்டும், கல்வி உதவிக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்தவும்.

கல்வி உதவித்தொகையை ஏற்கனவே வாங்கிய மாணவ, மாணவிகள் மட்டும் தங்கள் விண்ணப்பங்களில் கடந்த ஆண்டுகளில் பெற்ற உதவித்தொகையைத் தவறாமல் குறிப்பிட்டு, அறக்கட்டளைக்கு நேரடியாக அனுப்பி, இந்த ஆண்டு உதவித்தொகையைப் பெறலாம்.

ஏற்கனவே அறிமுகமான மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை நேரடியாக அறக்கட்டளைக்கு அனுப்ப சங்க நிர்வாகிகள் அறிவுரை கூற வேண்டுகிறோம்.

வேறு அறக்கட்டளையிலிருந்து, உதவித்தொகை பெற்ற மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை பரிந்துரை செய்ய வேண்டாம்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கிளைச் சங்கங்களின் நிர்வாகிகள், மாநில சங்கத்திடமிருந்து பெற்ற அங்கீகார கடிதங்களின் நகல்களுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

சம்பந்தப்பட்ட கிளைச்சங்கங்களின் கீழ் உள்ள ஊர்களிலுள்ள மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை மட்டும் பரிந்துரை செய்து அனுப்பவும். இதர ஊர்களிலுள்ள மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களை பரிந்துரைக்க வேண்டாம்.

கிளைச்சங்கங்களில் நிர்வாகிகளாகப் பணிபுரிந்துபிறகு ,விலகிய முன்னாள் நிர்வாகிகள், பரிந்துரைத்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கார்காத்தார் ஒப்புரவு இதழில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்தை கிழித்து அல்லது XEROX நகல் எடுத்து அனுப்ப வேண்டாம். கணினியில் புதிதாக டைப் செய்து உபயோகிக்கவும்.

கல்லூரியில் முதலாம் ஆண்டு சேரவிருக்கும் மாணவ மாணவிகள் கவுன்சிலிங்முடித்து கல்லூரி கட்டணம் கட்டிய (நகல்) ரசீதுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

மாணவ மாணவிகளின் விண்ணப்பங்களில் பரிந்துரை செய்யாமல், சங்க நிர்வாகிகள், அவர்களின் Letter Pad களில் அல்லது தனியாகக் கடிதங்களில் பரிந்துரை செய்து, அதில் சங்கத்தின் முத்திரையிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.

தந்தையை இழந்த / பிரிந்த மாணவ மாணவிகளின் பள்ளிக்கல்வி விண்ணப்பங்களையும் நன்றாக பரிசீலித்தபிறகு அனுப்பலாம். சங்க நிர்வாகிகள், தாங்கள் அனுப்பும் விண்ணப்பங்களுக்கு வரிசை எண்கள் கொடுக்கவும்.

மாணவர்களிடமிருந்து பெறப்படும் அசல் விண்ணப்பங்களை CREW அறக்கட்டளைக்கு அனுப்பி, நகலை, சங்க நிர்வாகிகள், தங்களுடன் வைத்திருக்கவும்.

மேற்படி விண்ணப்பங்களை சரிபார்த்து பரிசீலனை செய்து, ஏழ்மையான மாணவர்/மாணவி என்பதை உறுதிசெய்தபிறகு, தலைவர், செயலர் ஆகிய இருவரும் கையொப்பமிட்டு CREW அறக்கட்டளை, சிறுசேரி என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

Payment cum Receipt படிவத்தை A4 size இல் Type செய்து, வழங்கும் தொகை வங்கி விபரம், படிக்கும் கல்லூரி போன்ற விபரங்களை பூர்த்தி செய்ய போதுமான இடைவெளி விட வேண்டுகிறோம்.

முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 15.06.2026 க்குப் பிறகு அனுப்பவும்.

கல்வி உதவி பெறுவதற்கு, அனுப்பும் மாணவ மாணவிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கும் போது, எக்காரணம் கொண்டும் ,மீண்டும் மற்றொரு விண்ணப்பம் அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். ஒருவருக்கே இரு விண்ணப்பங்கள் பெறப்பட்டால் Duplication ஐ தவிர்ப்பதற்காக இரண்டுமே ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 30.11.2026 முடிய பெறப்படும்.

மாதிரி விண்ணப்பம் மற்றும் STAMP RECEIPT இத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

**தி.நெ. முத்துகுமாரசாமி**
கௌரவ ஆலோசகர்.
9445451604, 044 4741 4708

**ச. வெங்கடேசன்**
தலைவர்
CREW அறக்கட்டளை

குறிப்பு: கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தை சரியான வங்கி விபரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

**CREW அறக்கட்டளை,**

40 சப்தகிரி காலனி, சென்னை – 83

## கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பம்

***(கல்லூரி மாணவ, மாணவிகள் மட்டும் விண்ணப்பிக்கவும்)***

அனுப்புநர், தேதி : / / 2026

பெறுநர் :

நிறுவனர் அவர்கள்
CREW PUBLIC CHARITABLE TRUST
சென்னை–603 103.

பொருள் : கல்வி உதவித்தொகை விண்ணப்பம் சமர்ப்பிப்பது – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

CREW PUBLIC CHARITABLE TRUST மூலம் என்னுடைய கல்லூரி கல்விக்காக (College Study), தாங்கள் பண உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தேவையான விபரங்களை கீழே கொடுத்துள்ளேன்.

1. மாணவன் / மாணவி பெயர் :
2. தந்தை / தாய் / காப்பாளர் பெயர் :
3. மாணவன் / மாணவி முழுமையான நிரந்தர முகவரி :
4. தொலைபேசி, கைபேசி எண் :
5. (2026–27) கல்விஆண்டில் படிக்கப்போகும் வகுப்பு :
   (கல்லூரியில் எந்த ஆண்டு என்று அவசியம் குறிக்கவும்)
6. படிக்கும் கல்லூரி விபரங்கள் :
7. கல்லூரி படிப்பிற்கு அரசு ஒதுக்கீடு 7.5 % யின் கீழ்
   தேர்ந்தேடுக்கபட்டவரா : ஆம் ☐ இல்லை ☐

   தமிழ் புதல்வன் திட்டத்தின்
   கீழ் தேர்ந்தேடுக்கபட்டவரா ஆம் ☐ இல்லை ☐

   புதுமைப் பெண் திட்டத்தின்
   கீழ் தேர்ந்தேடுக்கபட்டவரா ஆம் ☐ இல்லை ☐
8. கல்லூரியிலிருந்து பெற்ற உத்தேச
   கல்விக் கட்டணத்தின் நகல்: (Estimate Copy) :

9. கடந்த தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகல் :

10. பெற்றோர்கள் பார்க்கும் தொழில் மற்றும் மாத வருமானம் :

11. பெற்றோர்களின் தொலைபேசி/கைபேசி எண் :

12. சென்ற ஆண்டுகளில் CREW அறக்கட்டளை :
மூலம் பெற்ற தொகை 1. 2022 – 2023 .................... :
2. 2023 – 2024 .................... :
3. 2024 – 2025 .................... :
4. 2025 – 2026 .................... :

13. சென்ற ஆண்டு மற்றும் இந்த ஆண்டு கட்டிய கல்விக்கட்டண ரசீதுகளின் நகல்களை இணைத்துள்ளேன் } ரசீது எண் தொகை தேதி

14. குறைந்த பட்சம் தேவைப்படும் தொகை: ரூபாய் :

15. குடும்பத்தில் முதல் பட்டதாரியா : ஆம் ☐ இல்லை ☐

16. மாணவர் அல்லது பெற்றோரின் நடப்பில் உள்ள வங்கி கணக்கு விபரங்கள் (தெளிவாக) (Account must be ACTIVE) :

17. வங்கியின் பெயர் மற்றும் கிளை :

18. கணக்கு வைத்திருப்பவர் பெயர்

19. வங்கி கணக்கு எண் :

20. வங்கி கணக்கு எண்ணுக்குரிய IFSC Code விபரம் :

21. வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் தெளிவான நகலை அல்லது Cancel செய்த ஒரு காசோலை (செக்) நகலை இணைக்கவும். :

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

பூர்த்தி செய்த விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி :
CREW TRUST
No. 9 / D-12, Sipcot IT Park,
Siruseri, Chennai - 603103.
Mobile No. 94454 51604, 044 - 4741 4708

1) மாணவன் / மாணவி கையொப்பம்.

2) தந்தை / தாய் / காப்பாளர் கையொப்பம்

## CREW PUBLIC CHARITABLE TRUST

Registered Document No. 290/2010
40, Sapthagiri Colony, Jafferkhanpet, Chennai-83

DATE...........................2026

**PAYMENT CUM RECEIPT**

Received with thanks from the CREW Public Charitable Trust a sum of Rs................ (Rupees......................................................) having been deposited in .......................................... ........... Bank ......................................Branch, A/C No. ............................................................for my studies at the institution ....................................................................... / as a helping measure towards my livelihood.

Revenue
Stamp

Receiver's Signature

Name ...........................................................

Address .......................................................

.........................................................................

Mobile (Cell) No.............................................

Encl: Xerox Copies of Receipts of tuition fees etc.,

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

சென்னை சூளைமேடு கார்காத்தார் இல்ல வளாகத்தில் செயல்பட்டு வரும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகத்தில் பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கணினியில் பயிற்சி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற அலுவலர்களும் விருப்பமிருப்பின் விண்ணப்பிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் மகளிர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட நமது சங்க முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

**– கைலை. சண்முகம்,**
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

முகவரி : **கார்காத்தார் இல்லம், 64,** சௌராஷ்டிரா நகர்,
**10–வது** தெரு, சூளைமேடு, சென்னை**–600 094.**
தொலைபேசி **: 044–24724882,** அலைபேசி **: 8248449204**

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
01.02.1938

மறைவு
14.06.2021

பின்னலூர், **S. சிவசுப்பிரமணியன்**
கூட்டுறவு சார்பதிவாளர் (CSR ஓய்வு)
சிதம்பரம்

*மண்ணில் வாழ்ந்த நாட்கள் குறைந்தாலும்,*

*மனதில் விட்டுச் சென்ற நினைவுகள் முடிவதில்லை...*

*உங்கள் அன்பும் பாசமும் என்றும் எங்களுடன் வாழும்*

மகன்
**S. கணேசன்**

மருமகள்
**G. ஜோதிலட்சுமி**

பேரன்கள்
**G. விஜய்,** BE
**G. கிஷோர்,** BE

## குழந்தைகள் உறவுகளையும் நட்புகளையும் பேணுதல்

A. Rajarethinam, Porur, Chennai.
Ph: 9444224366

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். அத்துடன் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்பிக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு உறவுகளையும், நட்புகளையும் பேணுதல் எப்படி என்பதையும் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு தாத்தா, பாட்டி, மாமா, மாமி, சித்தப்பா, சின்னம்மா, பெரியப்பா, பெரியம்மா, அத்தை, அண்ணன், அக்காள், தம்பி, தங்கை என்று பலர் இருக்கிறார்கள். மேலும் பெற்றோர்களுக்கு சிறந்த நட்புள்ளவர்கள், அக்கம்பக்கத்தினர், ஆசிரியர்கள் என்று பலர். அந்த உறவுக்காரர்களையும், நண்பர்களையும் பேணுதல் எப்படி என்பதை சிறு வயதிலேயே சொல்லிக்கொடுக்க வேண்டும். இவர்களிடம் எப்படி நடந்துகொள்வது என்பதை பெற்றோர்கள் குழந்தைகளுக்கு உணரவைக்க வேண்டும்.

மற்றவர்களிடம் பெற்றோர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை குழந்தைகள் கவனிக்கிறார்கள். ஆகையால் பெற்றோர்கள் உறவினர்களையும், நண்பர்களையும் பேணுதல் எப்படி என்பதை நடந்துகாட்ட வேண்டும். உங்கள் வீட்டிற்கு பெரியவர்கள் வரும்போது பெற்றோர்கள் எழுந்து அவர்களை வணங்கி வரவேற்க வேண்டும். அதைப் பார்க்கும் குழந்தைகள் தாங்களும் எழுந்து வருபவர்களை வணங்கி வரவேற்பார்கள்.

குழந்தைகளுடன் சேர்ந்து சினிமாவோ, T.V.யோ பார்க்கும்போது பெரியவர்களுக்கு சிறுவர்கள் மரியாதை கொடுப்பது போன்ற காட்சிகள் வந்தால், அதை குழந்தைகளுக்கு காட்ட வேண்டும். விருந்தினர்களிடமும், நண்பர்களிடமும் அன்பாக நடந்துகொள்ள குழந்தைகளைப் பழக்கவேண்டும். வடஇந்தியாவில் ஒரு நல்ல பழக்கத்தை நான் பார்த்திருக்கிறேன். வயதில் பெரியவர்கள் வந்தால், அவர்களை விட சிறியவர்கள், (கொஞ்சம் வயது வித்தியாசம் இருந்தால் கூட) குனிந்து காலைத் தொட்டு கும்பிடுவார்கள். இது அன்பை வளர்க்கும். நல்ல பண்பும் கூட. இதை நாமும் பின்பற்றலாமே.

பெற்றோர்கள் வெளியில் செல்லும்போது கூடுமானவரை குழந்தைகளையும் அழைத்துச் செல்லலாம். அப்போது மற்றவர்களுடனும், அவர்களது குழந்தைகளுடனும் பழக வாய்ப்பு கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

குழந்தைகளுக்கு மற்ற குழந்தைகளுக்கு உதவி செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டும். சாப்பிடும்போது மற்ற குழந்தைகளுக்கு கொடுத்து உதவும் பழக்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளை நெருங்கிய உறவினர்கள் வீடுகளுக்கு சென்று சில நாட்கள் தங்கும் பழக்கத்தையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். அது பிற்காலத்தில் மேற்படிப்புக்கு வெளியூர் செல்லும் போதும், ஹாஸ்டல்களில் தங்கி படிப்பதற்கும் உதவி செய்யும். படித்து முடித்துவிட்டு வெளியூர்களுக்கு வேலைக்கு செல்லும் போதும் தயக்கமின்றி, பயமின்றி செல்வார்கள்.

இத்தகைய பழக்கங்கள் குழந்தைகள் சிறந்த வாழ்க்கை வாழ வழி வகுக்கும்.

---

## நமது தமிழ் மொழியின் வளர்ச்சி தமிழ்ச் சங்கங்கள்

முதல் சங்கம் தென் மதுரை என்றழைக்கப்பட்ட குமரியில் இருந்துள்ளது. கபாடபுரத்தில் இடைச்சங்கம் அமைக்கப்பட்டது. இரண்டும் இரண்டு ஆழிப்பேரலையால் மூழ்கடிக்கப்பட்டது. கடைச்சங்கம் இன்றைய மதுரையில் அமைக்கப்பட்டது. முதல் சங்கத்தை நிறுவியவர் மன்னர் காய்சின வழுதி, கடைசி மன்னராக முதல் சங்கத்தின் போது இருந்தவன் மன்னன் கடுங்கோன். அச்சமயம் அகத்தியர் ‘அகத்தியம்’ என்ற இலக்கண நூலை எழுதினார். இடைச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் வெண்தேர்ச் செழியன். கடைசி மன்னர் முடத்திருமாறன். கிடைத்த நூல் தொல்காப்பியம் மட்டுமே. கபாடபுரத்திலிருந்து கடல்கோளில் தப்பித்து வந்த முடத்திருமாறன் மதுரையில் கடைச்சங்கத்தை நிறுவினார். கடைசி மன்னர் கானப்பேரெயில் உக்கிரப் பெருவழுதி. தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் மகன் இவர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் கிடைத்துள்ளன. நான்காம் தமிழ்ச் சங்கம் 1901–ல் பாண்டித்துரை தேவர் தலைமையில் மதுரையில் நிறுவப்பட்டது.

வாசகர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்து அறிந்துகொள்ள வேண்டுமென்ற முயற்சியில் நாங்கள் இதை முன்னெடுத்துள்ளோம். வரும் மாதங்களில் விரிவாக, தொடர்ச்சியாக, விட்டலனின் பக்தர்கள் போன்று மாதாமாதம் வாசகர்களாகிய உங்களைச் சந்திக்கிறோம்.

நன்றி!!

– ஆசிரியர் குழு

# எங்கள் கிராமம்

இன்பம்! ஆம், இயற்கையான இன்பம். இயற்கை உணவு, இயற்கை காற்று, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை – இவை எல்லாம் கிராமங்களில் தான் கிடைக்கும். ஆம், அதிலும் இயற்கை வளம் சூழச் சுற்றி நீர்நிலைகள், குளங்கள், ஊர்ப்புறத்திலும் அகத்திலும் கோவில்கள், வயல்கள், மரங்கள், தோப்புகள் யாவும் ஒருசேர அமைந்துவிட்ட கிராமம் சொர்க்கம் எனலாம்.

இத்தகைய சொர்க்கத்துக்கு ஈடானதும் என் தந்தை திரு. விக்னேஷ் அவர்கள் பிறந்து வளர்ந்து கல்வி பயின்ற மண்ணும், என் தாத்தா புலவர் பி. கிருஷ்ணமூர்த்தி, மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் (ப.நி) அவர்களும், பாட்டி திருமதி. இரா. மனோகரி, உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் (ப.நி) அவர்களும் நலமாக வளமாக வாழ்ந்து வருவதுமான கிராமத்தைப் பற்றிய உண்மைத் தகவல்களை வழங்குகிறேன்.

## இயற்கை வளம்

நாற்புறமும் ஏரிகள் அளவில் பெரியன அல்ல. ஆயினும், கலிக்கன் ஏரி, வடக்கன் குளம், காடவன் குட்டை, தெற்கேரி என நாற்புறமும் நீர்நிலைகள் பெரும்பாலும் கோடையிலும் சிறிதளவேனும் நீர் இருந்துகொண்டே இருக்கும். மிகவும் வறட்சிக்காலங்களில் மட்டுமே முழுவதும் வறண்டு போகும். தாமரைகள் மலரும் காட்சி அழகு.

இவற்றின் கரைகளில் ஆலமரம், அரசமரம் இருக்கும். படர்ந்து நின்று நிழல் தருகின்றன. இரவு நேரங்களில் பறவைகள் தஞ்சம் புகும் காட்சியும், ஒலி ஆரவாரமும் ரம்மியமாக இருக்கும். குளக்கரையில் பயன்தரும் புளியமரங்களும் உள்ளன.

நன்செய், புன்செய் இருவகை நிலங்களும் உள்ளன. நன்செய் நிலங்களில் தற்போது மின்மோட்டார் வசதியுடன் நெல், கரும்பு, சோளம், தென்னைமரங்கள் பயிரிடப்படுகின்றன. புன்செய் நிலங்களில் கம்பு, எள், கடலை, உளுந்து ஆகியன பயிரிடப்படுகின்றன. எப்போதும் கோடைக்காலங்கள் தவிர பசுமையாகவே இருக்கும்.

## ஆலயங்கள்

ஊர் எல்லையில் ஸ்ரீ அய்யனார் வடதிசையில் உள்ளார். மேல்புறம் ஸ்ரீ வீரனார் உள்ளார். கீழ்திசையில் ஸ்ரீ பிணித்தீர்த்தம்மன் அருள்பாலிக்கிறார். தென்திசையில் அதுவும் குளக்கரையில் சிவனும் பெருமாளும் ஒரே இடத்தில் உள்ளனர்.

நடுநாயகமாக மையப்பகுதியில் அருள்மிகு ஆனந்தவல்லி உடனாகிய கைலாசநாதர் கோயிலும், ஸ்ரீ கிருஷ்ணன் பஜனை மடமும் உள்ளன.

இவ்வாலயங்களில் ஆண்டுதோறும் விழாக்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். குறிப்பாகத் தமிழ் வருடப்பிறப்பு, சித்திரைப் பௌர்ணமி, ஆடிப்பூரம், அன்னாபிஷேகம், ஸ்ரீராமநவமி, சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கோகுலாஷ்டமி விழாக்களைக் குறிப்பிடலாம்.

## மக்கள் வாழ்க்கை முறை

சுமார் 80 விழுக்காடு மக்கள் விவசாயம் சார்ந்தவர்கள். சுற்றிலும் விவசாயக் கிராமங்கள் உள்ளன. சொந்தங்களில் கல்யாணம் நடைபெறும் வழக்கமும் உள்ளது. பெரும்பாலானவர்கள் தற்போது வேளாண்மையில் உள்ளனர். சமையல் கலைஞர்களும் அதிகம் உள்ளனர்.

அரசு மற்றும் தனியார் துறைகளில் பொதுமருத்துவர், பல்மருத்துவர், ஆசிரியர், வங்கி அதிகாரிகள், வழக்கறிஞர்கள், பொறியாளர்கள் ஆகியோராகவும், சுயதொழில் புரிவோராகவும் பலர் உள்ளனர். தன்னிறைவு பெற்ற கிராமம் எனலாம்.

தாத்தாவின் இளமைக் காலத்தில் சில ஓலைக்குடிசை (வீழல்) வீடுகள் இருந்தன. என் அப்பாவின் இளமைக் காலத்தில் அவை நாட்டு ஓடு வீடுகளாகின. தற்போது பல வீடுகள் மாடி வீடுகளாக மாறிவிட்டன; மாறியும் வருகின்றன.

தேநீர்க்கடை, மளிகைக்கடை, தையற்கடை, இ–சேவை மையம், ஊராட்சி அலுவலகம், நூலகம் ஆகியவை உள்ளன. ஆனால், காலை, இரவு இரண்டு வேளை மட்டுமே பேருந்து வசதி உள்ளது.

## அமைவிடம்

கும்பகோணம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மீன்சுருட்டிக்கு மேற்கிலும், திருச்சி–சிதம்பரம் சாலையில் கங்கைகொண்டசோழபுரம் நகருக்கு வடக்கிலும் உள்ளது. சாலை வசதிகள் உள்ளன. பெயருக்கு ஏற்றாற்போல் நல்ல ஊராகவே திகழ்கிறது.

## இதுவரை எந்த ஊர் என்று சொல்லவில்லையே அல்லவா?

அரியலூர் மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டத்தில் ஜெயங்கொண்டசோழபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இளையபெருமாள்நல்லூர் என்பதே அந்த கிராமம்.

நாங்கள் சென்னையில் இருந்தாலும் வருடத்தில் பலமுறை இவ்வூர் செல்வோம். அங்கு சென்றால் எல்லோருக்கும் ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே!

நன்றி!

வி. காருண்யஸ்ரீ, 9ம் வகுப்பு, எஸ்.பி.ஐ.ஓ.ஏ.
சர்வதேசப் பள்ளி, சென்னை வசிப்பிடம்:
சித்தாலப்பாக்கம், சென்னை – 600 126.

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
# மங்கல சந்திப்பு - 2026

## விண்ணப்பப் படிவம்

பெயர் :

பிறந்த தேதி :

நட்சத்திரம் :

ராசி :

கோத்திரம் :

உயரம் :

எடை :

நிறம் :

கல்வித் தகுதி :

பணி விபரம் :

பணிபுரியும் நிறுவனம்:

பணிபுரியும் ஊர் :

வருட வருமானம் :

தந்தையார் பெயர் :

தந்தையார் பணி :

தந்தையார் பூர்வீகம் :

தாயார் பெயர் :

தாயார் பணி :

தாயார் பூர்வீகம் :

சகோதரர்கள் விபரம் :

சகோதரிகள் விபரம் :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

வாட்ஸ்அப் எண் :

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்

பதிவு எண் : SRG / Trichy / 132 / 2024

## 23வது ஆண்டு மங்கல சந்திப்பு விழா

வணக்கம். திருச்சி கார்காத்தார் சங்கம் இதுவரை நடத்திய 22 மங்கல சந்திப்புகளின் மூலம் **1000**க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்துள்ளன. எங்களது ராசியான 23வது மங்கல சந்திப்பு இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற உள்ளது.

### 23வது ஆண்டு மங்கல சந்திப்பின் சிறப்புகள் :

1. மங்கல சந்திப்பிற்கு வருபவர்களுக்கு காலை தேநீர், மதிய உணவு வழங்கப்படும்.
2. பெற்றோர் தங்களது வரனை அவர்களே அறிமுகம் செய்யலாம், அப்போது வரன்களை நவீன முறையில் LED திரை மூலம் ஒளிப்பரப்பப்படும்.
3. வரன்களை பற்றிய முழு புத்தகமும், வண்ண புத்தகமாக வரனின் படத்துடன் ( Full Book in Multi Color with Profile Photo) அச்சிடப்பட உள்ளது.

நாள் : **15.08.2026 சனிக்கிழமை**

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

இடம் : **ஹோட்டல் அருண், சுமங்கலி மஹால் A/C,** ஜங்சன் அருகில், திருச்சி – 620 001.

**பதிவு கட்டணம் : ரூ.900/-** (புத்தகம் மற்றும் தபால் செலவு உட்பட).
A/c Name : Trichy Karkatha Velalar Sangam, Indian Bank, Ponnagar Branch, Trichy-1. A/c No. **7947445069** IFSC : IDIB000P105 என்ற வங்கி கணக்கிற்கு NEFT, Cheque, DD, Bank Transfer அல்லது QR Code மூலம் பணம் அனுப்ப வேண்டுகிறோம்.

### முக்கிய குறிப்புகள் :

1. பணம் செலுத்திய ரசீது நகலை விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும்.
2. கண்டிப்பாக பாஸ்போர்ட் **Size** கலர் போட்டோ ஒன்று இணைக்க வேண்டும்.
3. இணைக்கப்பட்டுள்ள படிவத்தை மட்டும் முறையாக எல்லா காலங்களையும் விடுதல் இன்றி தமிழில் தெளிவாக பூர்த்தி செய்து பதிவு தபால் அல்லது கொரியர் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
4. அரங்கில் நேரடி பதிவு கிடையாது **(No Spot Registration)**
5. மங்கல சந்திப்பு அன்று வரனின் **Biodata** நகலும், ஜாதக நகலும், **Photos-2** எடுத்து வரவும்.
6. பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே புத்தகம் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :**

**மணி பிரிண்டர்ஸ்,** C15/1, 5வது மெயின் ரோடு, இராமலிங்கநகர், உறையூர், திருச்சி – 620 003. **Cell : 98424 75125**

## பதிவுக்கு கடைசி நாள் : 31.07.2026

வாட்ஸ்அப் -ல் அனுப்பப்படும் பயோடேட்டா எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்பட மாட்டாது.

நவிலு. **N.B. பாலசுப்ரமணியன்**
அமைப்பாளர் / திருமண மையம்

**C.சபாபதி**
இணை அமைப்பாளர் **94459 17361**

**G.சிவகுருநாதன்**
தலைவர் / திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
**98427 82837**

**C.சுப்ரமணியன்**
செயலாளர்
**98424 75125**

**N.பாண்டியன்**
பொருளாளர்
**94879 96520**

# சீர்காழி சங்க 23ஆம் ஆண்டு அண்டு விழா














# கண்ணீர் அஞ்சலி







மலர்ந்தது:
05.05.1950

உதிர்ந்தது:
05.05.2026

# பார்வதி ஞானப்பிரகாசம்

**நிலவும் வானும் நிலமும் நீரும்**
**ஒன்றை விட்டு ஒன்று செல்லுமோ**
**நீயும் நாமும் கண்ட அன்பு**
**நெஞ்சை விட்டுச் செல்ல எண்ணுமோ**

என்றும் உன் நினைவில் வாழும்

கணவர்: **ச. ஞானப்பிரகாசம்**

| மூத்த மகன் | மகள் | இளைய மகன் |
|---|---|---|
| **கார்த்திகேயன்** | **சுஜாதா** | **கதிரவன்** |
| **அகிலாதேவி** | **அ. குமரன்** | **சுனித்தா** |
| **பார்வதி (ஜனனி)** | **ஆகாஷ்** | **அனுஷா** |
| **விக்னேஷ்வர்** | **ஆ. கற்பகரக்ஷா** | |
| | **அபிஷேக்** | |

கொள்ளுபேத்தி: **அக்ஷரா ஆகாஷ்**

# வைகுண்ட பதவி அடைந்தார்



மலர்ந்தது
11.04.1940
நாஞ்சலூர்

உதிர்ந்தது
15.05.2026
சென்னை

## திருமதி **G. பத்மாவதி**

பூர்வீகம் பூவிழுந்தநல்லூர், சிதம்பரம், 37/53, கமலீஸ்வரன் கோவில் தெருவில் வசித்து வரும் திரு. P.R. கோவிந்தராஜன் பிள்ளை (இரயில்வே ஓய்வு) அவர்களின் மனைவி, நாஞ்சலூர் திருமதி **G. பத்மாவதி** அவர்கள் பராபவ ஆண்டு சித்திரைத் திங்கள் 31ஆம் நாள் 15.05.2026 வெள்ளிக்கிழமை அதிகாலை 01.00 மணியளவில்வைகுண்ட பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது இறுதிச்சடங்கில் பங்கேற்று எங்களுக்கு ஆறுதல் கூறிய கார்குல சொந்தங்களுக்கும், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் தங்களின் நினைவில் வாழும்

கணவர் **P.R. கோவிந்தராஜன் பிள்ளை** (94868 28920)

மகள் **கலைச்செல்வி செல்வகுமார்**

பேத்தி கணவர் **சந்திரசேகர் முத்துகுமார்**

பேரன் **ஏகாம்பர் செல்வகுமார்**

பேத்தி **ஆராதனி சந்திரசேகர்**

பேரன் மனைவி **லஷ்மி ஏகாம்பர்**

கொள்ளுப் பேத்தி **ருத்ரா ஏகாம்பர்**

# நினைவஞ்சலி



**M. மைதிலி அம்மாள்** — மறைவு 19-05-2021

**T. முருகேசன் பிள்ளை** — மறைவு 12-11-2014

நமசிவாயபுரம், மயிலாடுதுறை Tk.,

மண்ணிலிருந்து விண்ணிற்கு சென்றாலும்
தங்களின் பெயரும், புகழும் இந்த மண்ணிலும்
நீங்காத நினைவுகள் எங்கள் மனதிலும்
என்றென்றும் நிலைத்திருக்கும்

## தங்களின் பாசமிகு குழந்தைகள்

## மகன்கள் - மருமகள்கள்

M. மனோகர், ஒசூர்.
M. லெட்சுமி
(9894558060)

M. கண்ணன், குத்தாலம்
K. ஜானகி
மகள்: M. சுதா

M. விவேகானந்தன்
M. கவிதா
நமசிவாயபுரம்

## பேரன்-பேத்திகள்

C. சுமன் இளம்பரிதி, B.E., - M. சௌம்யா, M.Sc., சென்னை.

R. அர்விந்த், MBA, CA, - K. காவியா, M.Sc., சென்னை


S. சபரிநாதன், BE - M. சுதில்யா, B.Sc., சென்னை.

M. சந்தியா, MCA, V. ஹர்ஷா, M.B.A., M. நிரஞ்சன்குமார், B.E.,

## கொள்ளு பேரன்கள்

S. சங்கமித்ரன், A. பிரணவ்.

ஐந்தாம் ஆண்டு
நினைவு அஞ்சலி



உதிர்ந்த முத்தே...
எங்களின் வாழ்நாள்
வழிகாட்டியே...
என்றும் சொல்கிறோம்
உந்தன் புகழினை...
நிறைவுடன்
வாழ்கிறோம்...
தங்கள்
வாழ்த்துக்களோடும்
ஆசிகளோடும்...

10.08.1943 - 05.06.2021

## வையூர் ஆ.சண்முகம் M.A.,M.Ed.,

மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணி ஓய்வு
நடராஜா நகர், சிதம்பரம்

**ச. தனலட்சுமி**
துணைவியார்

| | |
|---|---|
| **எஸ். ஹேமலதா** | **ச. சுமித்ரா** |
| **ஆர். ராஜா** | **ஜெ. பார்த்தசாரதி** |
| மயிலாடுதுறை | சிதம்பரம் |

பெயரன் / பெயர்த்தி

- R.H. ராஜ்குமார்
- P. விக்னேஷ்
- N. கணேஷ்
- R.H. ராஜலக்ஷ்மி
- செல்வி P. லட்சுமி பிரியா
- M. அலமேலு மங்கை
- S. விமலா

கொள்ளு பெயரன்

- ஆதிரன்
- மகத்
- விஷ்வ வர்மன்

கொள்ளு பெயர்த்தி

- தியா


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th June 2026

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

## Experience the Future of Hospitality:

**Our hotel rooms are seamlessly integrated with smart AI technology to offer a more personalized, comfortable, and efficient stay. From intelligent lighting and climate control to voice-assisted concierge services and instant room service requests, every detail is designed to make your experience smoother and smarter...**












**Discover convenience at your command—where innovation meets relaxation.**

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**